சுடர் 17 கதிர் 1

# மிட்ஸ் ஐக்கிய சுடர்

ஜனவரி - மார்ச் 2026


தனிச்சுற்றுக்கு மட்டும்

மும்மாத இதழ்




KANTARA
TRAVEL HUB
MARTHANDAM
7418938386, 7550024135
9943904846
kantara_holidays_hub


Best Wishes from.....
S.V.Cake Bakers
Kavoorkonam, Arumanai P.O.
வீட்டில் வைத்து
கேக் செய்து
ஆர்டர் மூலம்
தரப்படும்.
Viji V
Ph : 89038 00780


Best Wishes from.....
AS
CONSTRUCTION
WORKS
Keezhmancode
റിംഗ്, വേലിക്കല്ല്
PH: 9500594610
SANALKUMAR

ஆதரவாளர்கள்
மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்
தலைவர் - மிட்ஸ்

அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்
திரு. S. ஷாபின், B.D., M.S.W., M.Phil.,

ஆசிரியர் குழு
திருமதி. ஷீலா J.K.
திருமதி. ஷகிலா R.
Sr. அகதா DSS
திருமதி. விஜயா M.
திருமதி. கிருஷ்ணகுமாரி C.
திரு. ஷைனு B
திருமதி. ஞான ஜரின் சுகிலா M.
திருமதி. கிறிஸ்டல் ஜெபா T.


தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
திருமதி. V. சுனி

வெளியீடு
மிட்ஸ்,
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்
நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
நாகர்கோவில்

தனிச்சுற்றுக்கு மட்டும்

# உள்ளே ...


1. இயக்குநர் கடிதம் 2
2. சமூக ஒற்றுமையும் அரசமைப்புச் சாசனமும் 3
3. நிதி இல்லாதவர்க்கு இல்லை நீதி 4
4. சமூக நீதியின் பல்வேறு வடிவங்கள் 4
5. தவக்காலம் 5
6. சான்றோர் சொன்னவை 5
7. சமூக நீதி நாள் 5
8. அதிரசம் செய்யலாம் வாங்க! 6
9. மாலை சிற்றுண்டி எளிதில் செய்வது எப்படி? 6
10. சமூக நீதி மிளிர்வது 6
11. சமூக நீதி 7
12. விடுகதைகள் 7
13. நிறைவாழ்வு சங்கம் கிறிஸ்மஸ் விழா 8
14. மிட்ஸ் எழுவோம் இயக்கம் 9
15. புற்றுநோய் தின நிதி சேகரிப்பு 2026 10
16. கோல்பிங் 14
17. தளிர்கள் உலகம் - கிறிஸ்மஸ் விழா 15
18. மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு 16
19. மரியன் இயக்கம் - கடன் உதவி வழங்குதல் 16
20. பிற நிகழ்வுகள் 16
21. மிட்ஸ் விருட்சம் நுண்கடன் திட்டம் 17
22. மிட்ஸ் ஜீவன் திட்டம் 17
23. மிட்ஸ் குடும்ப வளர்ச்சித்திட்டம் 17
24. மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டம் (MMWS) 18
25. விண்ணைத்தொடு திட்டம் CTWWC 19
26. மகளிர் தினவிழா 19
27. 2026 ஆம் ஆண்டு மிட்ஸ் மகளிர் தினவிழாவின் சாதனையாளர்களாகிய கதாநாயகிகளின் வாழ்க்கை அனுபவங்கள் . . . 20
28. குறுக்கெழுத்துப் போட்டி 22
29. படித்ததில் பிடித்தது 24


நான் என்பதைக் கடந்து நாம் எனச் சிந்திப்பதே சமூக அக்கறையின் தொடக்கம்.

# இயக்குநர் கடிதம் . . .



அன்பில் கனிந்த சமூகநீதி - அதுவே மிட்ஸின் தொடர்கனவு. முப்பது ஆண்டுகளை எட்டும் இந்த எளிய பயணத்தில், கனமாகவும் கவனமாகவும் இணைந்து நடந்தவர்கள் பெண்களும் குழந்தைகளும் தான். உலகின் எந்த மூலையிலும் - பின் தங்கிய நாடுகளாக இருந்தாலும், வளர்ந்து வரும் சமூகங்களாக இருந்தாலும், அல்லது வளர்ந்த நாடுகளாக இருந்தாலும் மிகவும் பாதிப்புக்கு ஆளாபவர்கள் பெண்களும் குழந்தைகளும் தான். இந்த நிலைமை தனித்த ஒரு சம்பவமல்ல; இது இன்று ஒரு அமைப்பாகவே மாறிவிட்டது. அதன் அடிப்படை காரணிகளை ஆராய்ந்து, குடும்பம் - சமூகம் - அரசு ஆகிய மூன்றும் இணைந்து செயல்படும் போதுதான் நியாயமான சமூகத்தின் அடித்தளம் வலுப்படும். அமைதியாக இருப்பதாலோ, எதேச்சையாகச் செயல் படுவதாலோ நாம் விரும்பும் மாற்றம் உருவாகாது. ஒரு பெண் மனிதருக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை மனித உரிமைகளை சமூகம் உறுதிப்படுத்தாதபோது, அந்த உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வு பெற்று, அவற்றைப் பெறும் வரை உறுதியுடன் போராடுவது அவசியம். உரிமைகள் யாரும் தருவதல்ல - அவை அறிந்து, கேட்டு, பிடித்துக் கொள்ளப்பட வேண்டியவை.

பெண்களுக்கு வாய்ப்புகள் கிடைக்க வேண்டும். வளங்கள் சமமாக பகிரப்பட வேண்டும். அதிகாரத்தில் பங்கேற்கும் இடம் கிடைக்க வேண்டும். இவை இல்லாமல் சமூக முன்னேற்றம் ஒரு கனவாகவே மாறிவிடும். அரசியல் விழிப்புணர்வு இல்லாமல், முடிவெடுக்கும் இடங்களில் பெண்களின் குரல் கேட்கப்படாமல் இருந்தால், நாம் உருவாக்கப் படாத உலகில் வெறும் பயணாளிகளாக மட்டுமே இருந்து விடுவோம்.

உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ளும் ஆர்வம் பெண்களுக்குள் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் அங்கு அநீதி நடக்கிறது என்றும், எவ்வாறு பெண்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரியும். நாம் சார்ந்திருக்கும் அமைப்புகள் அல்லது அரசியல் கட்சிகளில் சமபங்கு கிடைக்கவில்லையெனில், சமத்துவத்தை உறுதிப்படுத்தும் மாற்று தளங்களைத் தேர்வு செய்து, அத்தகைய அரசியலை ஆதரிக்க துணிவுடன் முன்னேற வேண்டும்.

ஆண் ஆதிக்கமும், ஆணை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பும், பெண்களை பலவீனப்படுத்தும் வலயமாகவே தொடர்கிறது. இதை உணர்ந்து, பெண்கள் தங்களைப் பற்றிப் பேசத் தொடங்க வேண்டும். தங்கள் அனுபவங்களை பகிர வேண்டும். துயருறும் பெண்கள் தனித்தனியாக அல்ல, கூட்டாக ஒன்றிணைய வேண்டும். அந்த ஒற்றுமையே மாற்றத்தின் விதையாக மாறும்.

அன்றாட உலகை இயக்குகின்ற சட்டங்களை அறிதல் மிக முக்கியம். சட்டங்கள் புத்தகங்களில் மட்டுமே இருந்தால் பயனில்லை; அவை பெண்களின் கைகளில் கருவிகளாக மாற வேண்டும்.

சவால்கள் நிறைந்த இந்த பயணத்தில், பெண்கள் தங்களது உண்மை நிலை உணர்ந்து, ஒன்றிணைந்து, உரிமைக்காக குரல் கொடுக்கும் போது மட்டுமே சமூகநீதி உண்மையாக மலரும்.

**அருட்தந்தை. முனைவர் ஜெரோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

ஒடுக்கப்பட்டோரின் உரிமை காக்கப்படுவது தான் சமூக நீதி - மு.கருணாநிதி



# சமூக ஒற்றுமையும் அரசமைப்புச் சாசனமும்

- ஜெஸ்லின் ஷோபா
ஆற்றூர்

இந்தியாவின் சமகால அரசியல் மற்றும் சமூகச் சூழலில், சமூக ஒற்றுமை என்பது மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. தேர்தல்களில் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் அரசியல் கட்சிகள், மக்களைச் சாதி, மதம் மற்றும் மொழி ரீதியாகப் பிரித்துப் பார்ப்பது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தச் சூழலில், ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றிய அனுபவம் கொண்ட சமூகச் சிந்தனையாளர்கள், அரசாங்கத்திடம் ஒரு முக்கியமான கோரிக்கையை முன்வைக்கின்றனர்: "அரசமைப்புச் சாசனத்தின் விழுமியங்களை மக்களிடம் கொண்டு சென்று, சமூக ஒற்றுமையைப் பாதுகாக்கத் தனித்துவமான கொள்கை ஒன்றை உருவாக்குங்கள்" என்பதே!

**பிளவுபடும் சமூகம் மற்றும் ஜனநாயக வீழ்ச்சி**

மக்களாட்சி என்பது பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது மட்டுமல்ல, அது சமூக நீதியையும் அனைவருக்குமான வளர்ச்சியையும் உள்ளடக்கியது. ஆனால், வாக்கு வங்கி அரசியலால் சமூகப் பிணக்குகளும் வன்முறையும் அதிகரித்து வருகின்றன. உலக வங்கியின் புள்ளிவிவரங்கள் இந்திய சமூகத்தின் நிலையைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன:

சுமார் 82 கோடி மக்கள் இன்றும் உணவுப் பாதுகாப்புக்காக அரசாங்கத்தின் இலவசப் பொருட்களை நம்பியிருக்கின்றனர்.

42 கோடி மக்கள் எந்தவிதமான சமூகப் பாதுகாப்பும் இன்றி விளிம்பு நிலையில் வாழ்கின்றனர்.

வளர்ச்சியின் பலன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையவில்லை என்பதை அரசாங்கங்கள் ஒப்புக்கொண்டாலும், அதற்கான மூல காரணமான 'சமூகப் பிரிவினையை' சரிசெய்யத் தவறிவிட்டன. சாதிவாரி கணக்கெடுப்பு போன்ற அரசியல் நகர்வுகள் ஒருபுறம் இருந்தாலும், "கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?" என்பது போல, இந்திய மக்களின் தாழ்ந்த நிலைக்கு அரசியல் கட்சிகளின் குறுகிய கால நலன்களே காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

**அரசமைப்புச் சாசனத்தின் வழிகாட்டுதல்**

நமது அரசமைப்புச் சாசனத்தின் முகப்புரை (Preamble) "இந்தியக் குடிமக்களாகிய நாம்..." என்று தொடங்கி, இந்தியர்களாக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. சமத்துவம், சகோதரத்துவம், சமூக பொருளாதார அரசியல், நீதி மற்றும் மதச்சார்பின்மை ஆகியவையே இந்தச் சாசனத்தின் அடிநாதம்.

மதச்சார்பின்மை என்பது வெறும் வார்த்தையல்ல; அது ஒரு குடிமகன் மற்றொரு குடிமகனை அடையாளங்களால் ஒடுக்காமல், அனைவரும் பொதுத்தளத்தில் சமமாகச் செயல்படும் உளவியலாகும். சிறுபான்மையினர் பெரும்பான்மையினரால் அச்சுறுத்தப்படாமல் இருப்பதையும், ஒவ்வொரு குடிமகனும் தன் உரிமைகளை உணர்ந்து செயல்படுவதையும் சாசனம் உறுதி செய்கிறது. ஆனால், 78 ஆண்டுகாலச் சுதந்திரத்திற்குப் பின்னும் இந்த உளவியல் மக்களிடையே முழுமையாகச் சென்றடையவில்லை என்பதே கசப்பான உண்மை.

**தீர்வை நோக்கிய செயல்பாடுகள்:**

சமூக ஆர்வலர்கள் முன்வைக்கும் தீர்வு என்பது ஒரு சட்ட மாற்றமோ அல்லது வெறும் திட்டமோ அல்ல; அது ஒரு மக்கள் இயக்கமாகும். இதற்கு அவர்கள் பின்வரும் வழிமுறைகளைப் பரிந்துரைக்கின்றனர்:

1. **கல்வி நிறுவனங்களில் விழிப்புணர்வு:** பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழியாக அரசமைப்புச் சாசனத்தின் விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு செல்ல வேண்டும். பாடப்புத்தகங்களைக் கடந்து இது ஒரு வாழ்வியல் பண்பாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

2. **பயிற்சியாளர்கள் உருவாக்கம்:** முதலில் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு அரசமைப்புச் சாசனம் குறித்த ஆழமான புரிதலை ஏற்படுத்தி, அவர்களைச் சமூகச் செயல்பாட்டாளர்களாக மாற்ற வேண்டும்.

3. **மக்கள் விழிப்புணர்வு:** இந்தச் செயல்பாட்டாளர்கள் மூலம் சாமானிய மக்களிடம் சென்று, "இந்தியர்களாக இணைவதே வளர்ச்சிக்கு வழி" என்ற கருத்தைப் பதிய வைக்க வேண்டும்.

4. **ஊடகங்களின் பங்கு:** ஊடகங்களும் சமூக அமைப்புகளும் இணைந்து, இதனை ஓர் அறிவுசார் இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**முடிவுரை**

அரசாங்கத்தை உருவாக்குவது வாக்காளர்களின் கடமை. அந்தக் கடமையை மக்கள் நேர்மையாகவும், சாதி - மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டும் செய்யும் போதுதான் தூய்மையான நிர்வாகம் மலரும். "புதிய இந்தியா" என்பது கட்டிடங்களாலோ பொருளாதாரத் தரவுகளாலோ மட்டும் உருவாவதில்லை; அது ஒவ்வொரு குடிமகனின் சிந்தனையிலும் அரசமைப்புச் சாசன விழுமியங்கள் குடிபுகும்போதுதான் உருவாகும். சமூக ஒற்றுமையே ஜனநாயகத்தின் ஆணிவேர்; அதை அரசமைப்புச் சாசனத்தின் துணைக்கொண்டு காப்பதே காலத்தின் கட்டாயம்.

பயத்தை வெல்வதே சமூக முன்னேற்றத்தின் முதல்படி - பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட்



# நிதி இல்லாதவர்க்கு இல்லை நீதி

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள் 972) என்றுரைத்த பின்பும் இன்றும் பிறப்பால் மனித சாதிகள் மாறவில்லை. சமவுரிமை வேண்டும் தனக்கென்போர் பிறர்க்கு சமவுரிமை தந்திடவே மறுக்கின்றார்கள். ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தில் எளிய மக்களின் அடிப்படை தேவைகளும் உரிமைகளும் இல்லாத சூழல். சாதிப்பிரிவினை ஏழை பணக்கார வேறுபாடு, அவரவர் செய்யும் தொழில்களில் உயர்வு தாழ்வு வேற்றுமை என எளிய மக்கள் பல விதமான ஒடுக்கு முறைகளுக்கும் அநீதிகளுக்கும் உட்படுதல். ஆனால், அதிகார பணபலம் உள்ளவர்களின் தேவைகள் அரசால், அதிகாரிகளால் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். சாதாரண மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் போன்ற அநீதி செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் பணபலம் காரணமாக எளிதாக சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து விடுகின்றார்கள். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது எல்லாவற்றிற்கும் பணம் தான் முன்னிலை வகிக்கிறது. பணத்தைக் கொடுத்து எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஒரு தவறான மனநிலை. ஏழை ஒருவருக்கு அநீதி இழைக்கப்படுகின்ற போது அவர் நீதிக்காக நீதித்துறை நாடி செல்ல வேண்டும் என்றால், வழிநெடிகிலும் ஒவ்வொரு செயல்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால் பணம் தேவைப்படுகிறது. இல்லையெனில் அவருக்கு நீதி இல்லை. உண்மையும் நேர்மையும் தீர்ந்து விட்ட உலகிலே சமூகத்தில் அனுதினம் நடக்கின்ற அநீதிகளை நாம் கண்டு, எனக்கு என்ன என்ற மனநிலையில் செல்லாமல் மக்கள் யாவரும் சமம் என்ற உணர்வோடு பாகுபாடு மறந்து, அநீதிகளை எதிர்த்து போராடவும் தீமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும் ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் உரிமைகள் பெற்று மாண்புடன் வாழவும், சமூக நீதி - சமூக சமத்துவத்தினை ஏற்படுத்து வதற்கும், நிலைநாட்டவும், நாம் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். அதற்கு நமக்கு கடமையும் உரிமையும் உண்டு என்பதை ஒருபோதும் நாம் மறக்க கூடாது.

**திரு. B. ஷைனு,** மிட்ஸ் அலுவலர்.



# சமூக நீதியின் பல்வேறு வடிவங்கள்

சமூக நீதி என்பது சமூகத்தில் உள்ள அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் வாய்ப்புகளில் சமத்துவத்தையும் நியாயத்தையும் உறுதிச் செய்வதாகும். இது ஏற்றத் தாழ்வுகளை களைந்து விளிம்பு நிலை மக்களின் உரிமைகளை பாதுகாத்து அனைவரும் கண்ணியத்துடன் வாழ வழிவகை செய்கிறது.

**சமூக நீதியின் அடிப்படை**

- சமமான வாய்ப்புகள்
- வளப்பகிர்வு
- பாகுபாட்டை நீக்குதல்
- கண்ணியமான வாழ்வு

**சமமான வாய்ப்புகள்**

பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல் அனைவருக்கும் சமமான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குவது.

**வளப்பகிர்வு**

சமூகத்தில் உள்ள வளங்கள் மற்றும் வாய்ப்புகளை நியாயமாகவும், சமமாகவும் பகிர்ந்தளிப்பது.

**பாகுபாட்டை நீக்குதல்**

சாதி, இனம், பாலினம், மதம் போன்ற காரணங்களால் ஏற்படும் பாகுபாடுகளை களைந்து சமூக சமத்துவத்தை நிலைநாட்டுவது.

**கண்ணியமான வாழ்வு**

ஒவ்வொரு தனிநபரும் அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் பெற்று மாண்புடன் வாழ வழி செய்வது.

**சமூக நீதியின் முக்கியத்துவம்**

- பொருளாதார வளர்ச்சி
- சமத்துவமான சமூகம்
- அரசியலமைப்பு கடமை
- பல்வேறு வடிவங்கள்

**பொருளாதார வளர்ச்சி**

அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைத்தால் ஒட்டு மொத்த சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி மேம்படும்.

**சமத்துவமான சமூகம்**

ஏற்றத்தாழ்வுகள் குறைந்து, அனைவரும் சமமாக மதிக்கப்படும் ஒரு சமூகத்தை உருவாக்கும்.

**அரசியலமைப்பு கடமை**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சமூக நீதியை உறுதி செய்கிறது. இது அரசின் கடமையாகும்.


**பல்வேறு வடிவங்கள்**

இட ஒதுக்கீடுகள் மட்டுமல்லாமல் விளிம்பு நிலை சமூகங்களுக்கான மானியங்கள், வளர்ச்சித்திட்டங்கள், பாலின சமத்துவ சட்டங்கள் போன்றவையும் சமூக நீதியின் அம்சங்கள் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையால் பிப்ரவரி 20-ம் தேதி அன்று உலக சமூகநீதி நாள் கடைபிடிக்கப்படுகிறது. சுருங்க கூறின், சமூக நீதி என்பது அனைவருக்கும் சமமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒரு அடிப்படை தத்துவமாகும்.

**- திருமதி. ஷீலா**

அடக்குமுறைக்கு எதிரான போராட்டமே உண்மையான சமூக நீதி - சுபாஷ் சந்திர போஸ்

# தவக்காலம்



ஒடுக்கப்பட்டவர்களை நினைக்கும் காலம்!
தவக்காலம் உபவாசிக்கும் காலம் மட்டுமல்ல!
உணவில்லாதவர்களை உபசரிக்கும் காலம்!
தவக்காலம் பிறரை திருத்தும் காலம் அல்ல!
தம் குறையை ஆழமாய் உணரும் காலம்!
தவக்காலம் அமைதியாயிருக்கும் காலம் அல்ல!
இறைவனோடு அதிகமாய் உரையாடும் காலம்!
தவக்காலம் முடங்கி கிடக்கும் காலம் அல்ல!
தோய்ந்த இறைபணியை முடுக்கிவிடும் காலம்!
தவக்காலம் தீயவற்றை விடும் காலம்!
நற்செயல்களுக்காக திறமைகளை வளர்க்கும் காலம்!
தவக்காலம் மக்களிடமிருந்து பிரியும் காலம் அல்ல!
மக்களோடு ஒப்புரவாகும் காலம்!
தவக்காலம் இயேசுவின் சிலுவையருமே சுற்றும் காலம் அல்ல!
நம் சிலுவையை எடுத்துக்கொண்டு புறப்படும் காலம்!
தவக்காலம் இயேசுவின் மரணத்திற்காய் வருந்தும் காலம் மட்டுமல்ல!
அந்த மரணத்திற்கு காரணம் என்பாவம் என்பதை உணரும் காலம்!
தவக்காலம் வெறும் நாற்பது நாள்கள் பயணமல்ல!
இறைவன் நமக்கு கொடுத்த நாள் முடியும் வரையிலும்!!!

**திருமதி. விஜயா**
செயலூக்குநர்

# சான்றோர் சொன்னவை

- ❖ உண்மையை நேசி, பிழையை மன்னித்துவிடு.
- ❖ செய்ய முடிந்தவன் சாதிக்கிறான், செய்ய முடியாதவன் போதிக்கிறான்.
- ❖ ஒரு கல்விச் சாலையைத் திறப்பவன், ஒரு சிறைச்சாலையை மூடுகிறான்.
- ❖ பெரியவர்கள் கெட்டாலும் அவர்களது உயர்ந்த பண்புகள் அழியாது.
- ❖ வெறுத்தவன் சொல்லாதது இல்லை, பசித்தவன் தின்னாதது இல்லை.
- ❖ வாழ்க்கையில் மிகப்பெரும் மகிழ்ச்சி நேசிப்பதும், நேசிக்கப்படுவதும் தான்.
- ❖ வாழ்க்கையானது நட்பால் அரண் செய்யப்படவேண்டும்.
- ❖ நட்புக்கு எதிரி முன்கோபம். அது எல்லாவற்றையும் அழித்துவிடும்.
- ❖ தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர் நன்மை செய்கிறார். பாராட்டிக்கொண்டே இருப்பவர் தீங்கு செய்கிறார்.
- ❖ குணம் குணத்தோடு சேரும், எல்லோரும் இனிய குணத்தையே விரும்புவர்.

**Sr. அகதா** DSS
ஒருங்கிணைப்பாளர்

# சமூக  நீதி நாள்

- ❆ சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அடிப்படைத் தேவைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பெற்று மாண்புடன் வாழ வலியுறுத்தும் வகையில் சமூக நீதிதினம் கொண்டாடப்படுகிறது.
- ❆ யாவரும் சமம் என்ற உணர்வு எப்பொழுது அனைவரின் மனதிலும் உறுதி பெறுகின்றதோ அப்பொழுது தான் சமூகத்தில் நீதி என்ற நிலை நிலையாக நிற்கும்.
- ❆ உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற உண்மை நிலைக்கட்டும்! நீதியும் சமத்துவமும் நிறைந்த நல் சமுதாயம் மலரட்டும்.
- ❆ சமத்துவமே சமூக நீதியின் முதல்படி.
- ❆ சமூக வளர்ச்சி மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்பை உறுதி செய்தல் போன்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கொண்டாடப்படுகிறது.
- ❆ சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதை நினைவூட்டும் நாள்.

**திருமதி. ஷகிலா,** அமைப்பாளர்

ஒவ்வொருவருக்கும் சமஉரிமை கிடைப்பதே சமூக நீதியின் அடிப்படை - அறிஞர் அண்ணா



## அதிரசம் செய்யலாம் வாங்க!

**தேவையான பொருட்கள்**

பச்சரிசி - 1 கிலோ, வெல்லம் (சர்க்கரை) - ¾ கிலோ, ஏலக்காய் - 25 காய், சுக்கு - 10 கிராம், கசகசா - 10 கிராம், தேங்காய் எண்ணெய் - 50 மில்லி, தண்ணீர்

**செய்முறை**

பச்சரிசியை ஊற வைத்து, தண்ணீர் வடித்து, உலர வைத்து, பொடித்து வைத்துக்கொள்ளவும். சுக்கு மற்றும் ஏலக்காயை பொடி செய்து, அதனுடன் 150 ml தண்ணீர் விட்டு, பாகு காய்ச்சி, வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். (வெல்லம் நீரில் கரைந்தால் மட்டும் போதும்) பின்னர் அந்த வெல்லப்பாகினை ஒரு அடி அகன்ற பாத்திரத்தில் அடுப்பை சிம்மில் வைத்து மாவினை சிறிது சிறிதாகச் சேர்த்து, கட்டி பிடிக்காதவாறு கிளறி விடவும். பின்னர் அடுப்பை அணைத்து விடவும். பொடித்து வைத்த ஏலக்காய், சுக்கு மற்றும் கசகசாவை அதன் மேல் தூவி விடவும். 50ml தேங்காய் எண்ணெய் ஊற்றி மூடி வைக்கவும். 1 நாள் அப்படியே வைத்து விடவும். மறுநாள் மாவினை நன்கு கிளறிக்கொள்ளவும். ஒரு வாணலியில் 1 லிட்டர் எண்ணெய் ஊற்றி எண்ணெய் சூடானவுடன் அடுப்பை சிம்மில் வைத்து அதிரசம் தட்டி பொரித்து எடுக்கவும். சுவையான அதிரசம் ரெடி.

திருமதி. **M. ஞான ஜரின் சுகிலா**
அமைப்பாளர்

## மாலை சிற்றுண்டி எளிதில் செய்வது எப்படி?



புழுங்கல் அரிசி -1 கிலோ, கருப்பெட்டி - ½ கிலோ

**செய்முறை :**

புழுங்கல் அரிசியை நன்றாக வறுத்துப் பொடிக்க வேண்டும். அதன் பிறகு கருப்பெட்டி பாகு காய்ச்சி சிறு சூட்டில் பொடித்த மாவுடன் கலக்க வேண்டும். பின்பு சிறுசிறு உருண்டைகளாக உருட்ட வேண்டும். நன்கு ஆறிய பிறகு சுவையான உருண்டை தயார்.

## சமூக நீதி மிளிர்வது ...

கடவுள் மனிதனை தம் உருவில்
படைத்தார் இது கடவுளின் நீதி

நாட்டில் வளங்களெல்லாம் பகிர்ந்தளிப்பதே
சமூக உளவியல் நீதி

உயர்வு தாழ்வின்றி கல்வி பெற்று
சமுதாயத்தில் தன் நிலைபாட்டை
உயர்த்திக் கொள்வதும்

தடைக்கற்களை படிக்கற்களாக்கி பயணித்து
சாதனையின் சிகரத்தை தொடுவதும்

நாட்டின் வளங்கள் சுரண்டல் தவிர்த்து
பகிர்ந்தளிக்கப்படுவதும்
சாதி, மத வேறுபாடின்றி
மனிதம் மலர்வதும் சமூகநீதி

பேச்சில் அல்ல, செயல்படும் போது
உடலில் சிறகு முளைக்கும்
தன்னம்பிக்கை பிறக்கும்
அறிவைத்தேடி வாழ்க்கை நகரும்
பகுத்தறிவு இரத்தத்தில் பதிவாகும்!

மனிதம் மலரும்!
சமூக நீதி மிளிரும்!

**அருட்சகோதரி இம்மானுவேல் டி.எம்**



தராசுகள் தரமென்றாலும்
தரமற்றவர்களின் கையில்
உங்கள் மதிப்பின் எடை
கூடும், குறையும்.
எனவே அடுத்தவரின்
கணிப்பை கண்டு கவலை
கொள்ளாதீர்கள் . . . !!

சமூக நீதி என்பது ஒரு இலக்கு; அதை அடைய நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் - மார்ட்டின் லூத்தர் சிங்

# சமூக நீதி

சமூக நீதி என்பது ஒரு சமூகத்தில் வாழும் அனைத்து மக்களும் சமமான உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் மரியாதையை பெற வேண்டும் என்பதைக் குறிக்கிறது. மனிதர்கள் சாதி, மதம், மொழி, பாலினம் அல்லது பொருளாதார நிலை போன்ற வேறுபாடு களால் பிரிக்கப்படாமல், அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். சமூக நீதி என்பது ஒரு நல்ல மற்றும் அமைதியான சமூகத்தின் அடித்தளம் ஆகும்.

நாம் வாழும் சமூகத்தில் பல்வேறு வகையான மக்கள் உள்ளனர். சிலர் பணக்காரர்கள், சிலர் ஏழைகள், சிலருக்கு நல்ல கல்வி மற்றும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் சிலருக்கு அது கிடைப் பதில்லை. இப்படியான வேறுபாடுகள் சமூகத்தில் அநீதியை உருவாக்குகின்றன. இந்த அநீதிகளை நீக்கி, அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதே சமூக நீதியின் முக்கிய நோக்கம் ஆகும்.

கல்வி என்பது சமூக நீதியை நிலைநாட்ட மிக முக்கியமான ஒரு கருவி ஆகும். கல்வி பெற்றால் மனிதன் அறிவு பெறுவான், நல்ல வேலை பெறுவான். மேலும் நல்ல வாழ்க்கையை வாழ முடியும். அதனால் அரசு ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி, இலவச புத்தகங்கள், இலவச உடைகள் மற்றும் உதவித் தொகை வழங்குகிறது. தமிழ்நாட்டில் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு மற்றும் காலை உணவு திட்டம் வழங்கப்படுகிறது. இது மாணவர்களின் உடல்நலத்தையும், கல்வி முன்னேற்றத்தையும் மேம்படுத்துகிறது.

சமூக நீதி என்பது பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் கூறுகிறது. பெண்களும் கல்வி கற்கவும், வேலை செய்யவும், சமூகத்தில் முன்னேறவும் சம உரிமை பெற்றவர்கள். பெண்களுக்கு கல்வி உதவி, இலவச பேருந்து பயணம் மற்றும் பல நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இது பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவுகிறது.

தமிழ்நாடு அரசு நீதியை நிலைநாட்ட பல முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு சமூக நீதி நடைமுறையில் எப்படி முன்னோடியான மாநிலமாக கருதப்படுகிறது?

முதலாவது, தமிழ்நாட்டில் கல்வி மற்றும் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு முறை செயல்படுத்தப் படுகிறது. இது பின்தங்கிய சமூகத்தினருக்கு முன்னேற வாய்ப்பு வழங்குகிறது. இந்த முறை சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்க உதவுகிறது.

இரண்டாவது, அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு மற்றும் காலை உணவு வழங்கப்படுகிறது. இந்த திட்டம் ஏழை மாணவர்கள் பசியின்றி கல்வி கற்க உதவுகிறது. இது அவர்களின் பள்ளி வருகையை அதிகரிக்கிறது.

மூன்றாவது, பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு பல திட்டங்களை வழங்குகிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், கல்வி உதவி மற்றும் நிதி உதவி வழங்கப்படுகிறது. இது பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது.

நான்காவது, அரசு ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை, வீட்டு திட்டம் மற்றும் கல்வி உதவி வழங்குகிறது. இது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

இந்த அனைத்து நடவடிக்கைகளும் சமூக நீதியை நிலைநாட்ட முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு இதையே உறுதிசெய்கின்றன.

சமூக நீதி என்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதரின் பொறுப்பும் ஆகும். நாம் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். சாதி, மதம் அல்லது பணம் காரணமாக ஒருவரையும் பாகுபாடு செய்யக்கூடாது. நாம் மற்றவர்களை மதித்து நடத்த வேண்டும். இதனால் சமூகத்தில் அன்பும் ஒற்றுமையும் உருவாகும்.

சமூக நீதி நிலைநாட்டப்பட்டால், சமூகத்தில் அமைதி மற்றும் முன்னேற்றம் ஏற்படும். அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் போது, நாடும் வளர்ச்சி அடையும். சமூக நீதி இல்லாமல் ஒரு சமூகமும் முழுமையாக முன்னேற முடியாது.

முடிவாக, சமூக நீதி என்பது அனைவருக்கும் சம உரிமை மற்றும் சம வாய்ப்பு வழங்கும் ஒரு முக்கியமான கொள்கையாகும். அரசு பல நலத்திட்டங்கள் மூலம் சமூக நீதியை நிலைநாட்ட முயற்சி செய்து வருகிறது. நாம் அனைவரும் சமூக நீதியை மதித்து செயல்பட்டால், ஒரு நல்ல, சமத்துவமான மற்றும் முன்னேற்றமான சமூகத்தை உருவாக்க முடியும்.

**திருமதி. அல்போன்சா**
மிட்ஸ் பணியாளர்

## விடுகதைகள்

1. நான் வெட்டுபட்டால் வெட்டியவனை அழ வைப்பேன். அது என்ன?
2. முட்டை இடும், சட்டை கழட்டும், மூன்று மாதம் அடைகாக்கும், படம் எடுக்கும் நாக்கை நீட்டும். ஆனால் பாம்பு இல்லை அது என்ன?
3. ஓடுவான் சாடுவான் ஒற்றைக்காலில் நிற்பான்?
4. அப்பா பணத்தை எண்ண முடியாது; அம்மா சேலையை மடக்க முடியாது அது என்ன?
5. காட்டில் போனால் கலகலப்பாய் இருப்பான். வீட்டில் வந்தால் உறங்குவான்?

1. **வெங்காயம்**, 2. **பனங்கிழங்கு**, 3. **கதவு**, 4. **நட்சத்திரம், வானம்**, 5.**வெட்டுக்கத்தி**

சமூக நீதி என்பது சட்டத்தின் முன் சமத்துவம் மட்டுமல்ல, வாழ்க்கையில் சமத்துவமும் ஆகும் - டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

# நிறைவாழ்வு சங்கம் கிறிஸ்மஸ் விழா





மிட்ஸ் சமூகப்பணி நிறுவனத்தில் 513 சுய உதவி குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த சுய உதவி குழுக் களுக்கான வருடாந்திர கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் விழாவானது 16.12.2025 அன்று காலை 10 மணிக்கு மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தாரகை கத்பர்ட், கன்னியாகுமரி மாவட்ட குற்ற வழக்குத் தொடர் துறை உதவி இயக்குநர் திருமதி ஜெப ஜீவா, மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட், பெடரல் வங்கியின் திருவனந்தபுரம் மண்டல துணை தலைவர் திருமதி ரேஷ்மி ஓமனகுட்டன் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாக கலந்து கொண்டனர். விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்களை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் இன்முகத்துடன் வரவேற்றார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸில் செயல்படும் திட்டங்கள், அவற்றால் மக்கள் பெற்று வரும் நன்மைகள் குறித்து விளக்கினார்கள். தொடர்ந்து, பேசிய கன்னியாகுமரி மாவட்ட குற்ற வழக்கு தொடர் துறை உதவி இயக்குநர் திருமதி ஜெப ஜீவா அவர்கள், பெண்கள் தங்களது மதிப்பு மிக்க நேரத்தை தொழில் செய்வதில் செலவிட்டு முன்னேற வேண்டும் என்றும், சமூக அக்கறையோடும், விழிப்புணர்வோடும், உண்மையாகவும், நேர்த்தியாகவும் செயல்பட வேண்டும் என்றும் வாழ்த்தினார்கள். பின்னர் பேசிய விளவங்கோடு சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தாரகை கத்பர்ட் அவர்கள் பெண்களின் மகத்துவம் மற்றும் சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை பெண்கள் செய்து வரும் தியாகங்கள் குறித்து பல கருத்துகளை கூறி, பெண்கள் மேலும் சமூகத்தில் உயர வேண்டும் என்று வாழ்த்தினார்கள். மேலும் மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அடிகளார், திருமதி ரேஷ்மி ஓமனகுட்டன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி, கிறிஸ்மஸ் தின செய்தியளித்து, அனைவரையும் வாழ்த்தினார்கள்.



தொடர்ந்து, விவசாயிகளை தொழில் முனைவோராக்கும் அரிய முயற்சியாக, எளிய அடித்தட்டு மக்கள் தங்களது தொழில் முனைப்புகளை கூட்டாக மேற்கொண்டு, தங்களை மேம்படுத்தி கொள்ளும் வாய்ப்புகளை உருவாக்கித் தர ஊக்குவிக்கும் MOM (Marthandam Opportunity Makers) என்ற நிறுவனத்தை விழா மேடையில் மேதகு ஆயர் அவர்கள் துவங்கி வைத்தார்கள். MOM நிறுவனத்தின் செயல்பாடுகள், முக்கியத்துவம் தற்போது இந்த நிறுவனத்தின் வழியாக செயல்படுத்தப்படும் தேன் உற்பத்தி மற்றும்

சமூக நீதி என்பர் ஒரு கடமை அதை நாம் அனைவரும் செய்ய வேண்டும் - வி.ஆ. சந்திரச்சூடன்.



அதன் பயன்கள் குறித்து பேரருட்தந்தை பிராங்கிளின் அவர்கள் விளக்கி கூறினார்கள். மேலும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கிளஸ்டர் பொறுப்பாளர்கள், மற்றும் சிறப்பாக செயல்பட்டு வரும் சுயஉதவிக்குழு பொறுப்பாளர்களுக்கும் ஆயர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் இடையே சுய உதவி குழு பொறுப்பாளர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் தேசிய கீதத்துடன் விழாவானது இனிதே நிறைவு பெற்றது. இந்த விழாவில் மிட்ஸ் மண்டல இயக்குநர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் 450-க்கும் மேற்பட்ட சுய உதவி குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## மிட்ஸ் எழுவோம் இயக்கம்

27.11.2025 அன்று எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் முகாம் நடைக்காவு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 47 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



## தன்னார்வலர் பயிற்சி

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் மிட்ஸ் சார்பாக நடத்தப்படும் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு தன்னார்வலர்களை தயார்படுத்தும் விதமாக 28.01.2026 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் அருட்தந்தை முனைவர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன் அவர்களால் மனஉறுதியே "**புற்றுநோய் அரண்**" என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. பின்னர் பிப்ரவரி 1-ம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான வழிகாட்டுதல்களும், துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன. இந்த பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம்

அகில உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு, மிட்ஸ் நிறுவனம் சார்பாக பிப்ரவரி மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணி வரை "**தனித்துவத்தால் ஒருங்கிணைவோம்**" என்னும் சிந்தனையுடன் கன்னியாகுமரி மாவட்டத்தின் மிட்ஸ் பணி மண்டலங்களுக்குட்பட்ட 127 பகுதிகளில் வைத்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த பிரச்சாரத்தில் அருட்தந்தையர்கள் அருட் கன்னியர்கள், மருத்துவர்கள், அரசியல் தலைவர்கள், மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் மிட்ஸ் உறுப்பினர்கள் ஆகியோர் தன்னார்வத்துடன் கலந்துகொண்டு, இந்த பிரச்சாரத்திற்கு வலுவூட்டினர்.





குமரியில் 150 இடங்களில்
புற்றுநோய் விழிப்புணர்வு பிரசாரம்



# புற்றுநோய் தின நிதி சேகரிப்பு 2026

| கிளஸ்டர் | தொகை (Rs.) |
|---|---|
| **அகஸ்தீஸ்வரம்** | |
| மிட்ஸ் ஹைபிஸ்கஸ் | 1000 |
| பிறியதர்சினி | 1000 |
| மிட்ஸ் மலர் | 700 |
| மிட்ஸ் பை ஸ்டார் | 700 |
| மிட்ஸ் தென்றல் | 1000 |
| மிட்ஸ் வெண்ணிலா | 1050 |
| டைமண்ட் | 1000 |
| மிட்ஸ் மலர் | 250 |
| மிட்ஸ் ஸ்ரீசக்தி | 900 |
| மிட்ஸ் டாலியா | 850 |
| மிட்ஸ் ரோஸ் தோப்பு | 2500 |
| மிட்ஸ் சக்தி | 500 |
| எழுசாத்துபற்று | 1300 |
| மொத்தம் | **12750** |
| **மந்தாரம்புதூர்** | |
| மிட்ஸ் அகஸ்தீஸ்வரம் | 1900 |
| மிட்ஸ் செந்தூரம் | 2200 |
| மிட்ஸ் சங்கமம் | 400 |
| மிட்ஸ் வெள்ளை ரோஜா | 1380 |
| மிட்ஸ் கோவா | 900 |
| மிட்ஸ லில்லி மந்தாரம்புதூர் | 500 |
| புதுமலர் குழு | 1000 |
| மொத்தம் | **8280** |
| **சின்னத்துறை** | |
| மிட்ஸ் கல்லியாணமாதா | 1400 |
| மிட்ஸ் நிக்கோலஸ் | 800 |
| அனுங்கிரகமாதா | 1400 |
| மிட்ஸ் செபாஸ்டின் | 1400 |
| மிட்ஸ் தோமஸ் | 1400 |
| மிட்ஸ் அருளப்பர் | 500 |
| மிட்ஸ் குழந்தை யேசு | 1400 |
| மிட்ஸ் கிறிஸ்துராஜா | 1000 |
| நாயகி | 1500 |
| மிட்ஸ் கார்மல் | 1600 |
| அன்னை தெரசா | 2300 |
| யகோவா | 1900 |
| பாத்திமா மாதா | 1500 |
| மிட்ஸ் அருளப்பர் | 1700 |
| மிட்ஸ் ஒளி மாதா | 2100 |
| ஜார்ஜ் | 1300 |
| அல்போன்சா | 1200 |
| மிட்ஸ் லூசியா | 1000 |
| மிட்ஸ் ஜீசஸ் | 1300 |
| குழந்தை தெரசா | 1500 |
| மிட்ஸ் ஆரோக்கியம் | 1000 |
| மிட்ஸ் மேரி | 1800 |
| மிட்ஸ் வள்ளவிளை | 1000 |
| மொத்தம் | **32000** |
| **மேக்கோடு** | |
| மிட்ஸ் மருதன்விளை | 2395 |
| மிட்ஸ் ஜாஸ்பின் | 540 |
| மீனச்சல் | 2000 |
| பனிச்சக்குழி | 3250 |
| பனிச்சக்குழி II | 2381 |
| மேக்கோடு II | 2260 |
| வென்னிலா | 1640 |
| மிட்ஸ் நவ்வோதையா | 2000 |
| மேக்கோடு | 1700 |
| மிட்ஸ் றோஸ் | 660 |
| மிட்ஸ் மீனச்சல் II | 860 |
| மொத்தம் | **19686** |
| **ஆதிச்சவிளாகம்** | |
| மிட்ஸ் வலியவிளை சுயஉதவிக்குழு | 1000 |
| மிட்ஸ் லபோனா | 1000 |
| மிட்ஸ் நித்திரவிளை | 1650 |
| மிட்ஸ் செறுமுகம் | 625 |
| புலையன்விளை | 2080 |
| கொன்னக்காடு | 500 |
| நைனான்விளை | 500 |
| மிட்ஸ் கைத்தறவிளை | 1300 |
| மங்கலத்துவிளை | 2130 |
| மிட்ஸ் கோல்டு | 1000 |
| வலியவிளாகம் | 2780 |
| உதிவிளை | 1400 |
| மிட்ஸ் காணவிளை | 1500 |
| புனத்துவிளை | 2600 |
| மங்கலத்துவிளை II | 1000 |
| மிட்ஸ் புதுக்கோடு | 1560 |
| கிழங்குவிளை | 850 |
| ஆதிச்சவிளாகம் | 1000 |
| நிரவுவிளை | 2500 |
| தெக்குவிளை | 6050 |
| மொத்தம் | **33025** |
| **பாலவிளை** | |
| காரைக்காவிளை | 2100 |
| மிட்ஸ் எழுமான்விளை | 200 |
| மங்குழி II | 950 |
| மிட்ஸ் மணலி II | 520 |
| பல்லுக்குழி | 550 |
| மிட்ஸ் செறுக்குழி | 1400 |
| புஷ்பகிரி | 1801 |
| மிட்ஸ் புஷ்பகிரி II | 720 |
| பாலவிளை I | 1485 |
| கிழக்கேபொற்றை | 3524 |
| மிட்ஸ் ஆனப்பாறை | 1240 |
| மிட்ஸ் இடைக்காடு | 2060 |
| மிட்ஸ் பாத்திமாபுரம் | 2768 |
| மிட்ஸ் அடைக்காக்குழி | 1150 |
| மாவறத்தலை | 1012 |
| மிட்ஸ் பின்குளம் | 1750 |
| ஊரம்புவிளை II | 1000 |
| உபரித்தலை | 3258 |
| மிட்ஸ் மணலி | 2200 |
| போராங்கோடு | 1006 |
| மிட்ஸ் பேரகத்துவிளை | 1010 |
| மண்ணான்விளாகம் | 1165 |
| மிட்ஸ் பாலவிளை II | 2834 |
| கடுவாக்குழி | 1000 |
| மிட்ஸ் பனங்கூட்டம் | 800 |
| காட்டுக்கடை | 2427 |
| முதுகுடி | 1100 |
| காவுவிளை | 1266 |
| மிட்ஸ் நெடியவிளை | 1480 |
| ஈந்திக்கால விளை | 1400 |
| முரியவிளாகம் | 3110 |
| புல்லுவிளை | 1740 |
| மிட்ஸ் கோவில்தட்டு | 3053 |
| பரணிமாவிளை | 5000 |
| மிட்ஸ் குழால் | 3700 |
| மொத்தம் | **61779** |
| **நடைக்காவு** | |
| கும்பளப்பள்ளி | 1100 |
| சோனிச்சன்விளை | 800 |
| ஜெயமாதா | 900 |
| மிட்ஸ் கண்ணங்கரவிளை | 635 |

பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றம் அடையும்போது தான் சமூக நீதி நிறைவேறும் - மு.கருணாநிதி

| | |
|---|---|
| மிட்ஸ் ஆதிவிளை | 950 |
| மிட்ஸ் விண்மீன் | 1430 |
| மிட்ஸ் கிடாரக்குழி II | 836 |
| மிட்ஸ் கிடாரக்குழி IV | 500 |
| புளிநின்றவிளை | 2000 |
| மிட்ஸ் கிடாரக்குழி III | 3330 |
| அருள் ஜோதி | 860 |
| மாவிளை | 1000 |
| வலியவிளை | 750 |
| நெல்லிவிளை | 2130 |
| மிட்ஸ் நாதம் | 1925 |
| தாழான்விளை | 526 |
| மணலிவிளை | 400 |
| சாத்தன்கோடு | 1000 |
| மிட்ஸ் கிடாரக்குழி | 1150 |
| அறுவன்பொற்றை | 250 |
| மிட்ஸ் தாணிவிளை | 1000 |
| பருத்திவிளை | 500 |
| மிட்ஸ் நடுதேரிவிளை | 1000 |
| சென்தோமஸ் மிட்ஸ் | 1800 |
| மிட்ஸ் கிடாரக்குழி IV | 250 |
| கொட்டைக்காடு | 700 |
| நீரோட்டுவிளை | 1000 |
| கல்லம்பொற்றை | 750 |
| கல்லசாரிவிளை | 1000 |
| கீழவீட்டுவிளை | 1250 |
| மொத்தம் | **32672** |

## கிராத்தூர்

| | |
|---|---|
| தேரிவிளை | 1075 |
| டோமினிக் சேவியோ | 1310 |
| மஞ்சத்தோப்பு | 1076 |
| மிட்ஸ் கல்லுபொற்றை சுயஉதவிக்குழு | 1050 |
| மிட்ஸ் ரெத்தினபுரம் | 350 |
| வெள்ளங்கெட்டி | 1100 |
| தாணிப்பழஞ்சி | 2005 |
| பண்டாரக்காடு | 1000 |
| தட்டான்விளை | 10136 |
| தேரிவிளை I | 500 |
| துண்டுவிளை I | 990 |
| பன்னீட்டுவிளை II | 1000 |
| மிட்ஸ் மேலவிளை | 2100 |
| மிட்ஸ் மஞ்சத்தோப்பு IV | 750 |
| ஆலுமூடு | 3200 |
| மஞ்சத்தோப்பு III | 1000 |
| கைவாணிவிளை | 1110 |
| மிட்ஸ் குன்னிச்சன்விளை | 850 |
| மிட்ஸ் தெருவிளாகம் | 800 |
| காரவிளை | 2505 |
| மஞ்சத்தோப்பு II | 350 |
| பிலாங்காலை | 1000 |
| மாவுநிந்நவிளை II | 1770 |
| தானிநிந்நவிளை | 2202 |
| மிட்ஸ் மஞ்சத்தோப்பு காலனி IV | 1520 |
| அடச்சுவிளாகம் | 1545 |
| அஞ்சாலி | 1500 |
| ஆழுங்கால்விளை | 1000 |
| குருத்தோலைக்கட்டி I | 600 |
| மருதுங்காவிளை | 1570 |
| வடக்கே விறகுவெட்டிவிளை | 1380 |
| கல்வெட்டாங்குழி | 1560 |
| காஞ்சிரம்தட்டு | 650 |
| வெங்குளம்கரை | 1150 |
| விறகுவெட்டிவிளை | 800 |
| மாவுநிந்நவிளை | 500 |
| குருத்தோலைக்கட்டி II | 1195 |
| மொத்தம் | **54199** |

## சூரியகோடு

| | |
|---|---|
| குந்நம்விளாகம் | 1000 |
| வண்டங்கனாவிளை | 2000 |
| குறிச்சிவிளை | 1861 |
| வயலங்கரை | 1600 |
| மிட்ஸ் சணையன்விளை | 1650 |
| காஞ்சிரவிளாகம் | 1060 |
| மரியகிரி | 1550 |
| பாத்திமாநகர் | 540 |
| மருதன்கோடு | 1000 |
| கல்லுவிளை | 910 |
| உதயபுரம் | 1000 |
| கல்லறவிளை | 750 |
| குழிஞ்ஞான்விளை | 1000 |
| மிட்ஸ் அன்னை | 1000 |
| அப்பட்டுவிளை | 1000 |
| பொன்னறவிளை | 900 |
| மண்விளை | 1000 |
| மிட்ஸ் கிறிஸ்துஅரசர் | 1000 |
| மடத்துவிளை | 1000 |
| கண்டச்சன்விளை | 1000 |
| பெருமன்விளை | 1750 |
| ஆலுவிளை | 1000 |
| ஒட்டுவிளை | 900 |
| மொத்தம் | **26471** |

## பிலாங்காலை - கோல்பிங்

| | |
|---|---|
| மோனிஷா | 1000 |
| செல்வகுமாரி | 500 |
| ஏசுராஜ் | 500 |
| கிங்சிலி | 5000 |
| நிஷாந்தி | 1000 |
| ரேட்லின் வினிஸ்டர் | 500 |
| மேரி சாந்தி | 2000 |
| பிலாங்காலை கிளஸ்டர் | 12400 |
| மொத்தம் | **22900** |

## மார்த்தாண்டம்

| | |
|---|---|
| சாத்தச்சிவிளை I | 1100 |
| மிட்ஸ் குழிவிளை | 1000 |
| அக்கிவிளை | 950 |
| கோணம் I | 1000 |
| கோணம் II | 2820 |
| மிட்ஸ் நெடுவிளை | 1900 |
| சாத்தாச்சிவிளளை II | 4035 |
| மாமூட்டுக்கடை | 900 |
| மிட்ஸ் கல்லுவிளை | 1690 |
| மிட்ஸ் இறஞ்சிலி சுயஉதவிக்குழு | 1000 |
| தச்சன்விளாகம் | 600 |
| பன்னிமான்தோட்டம் | 1000 |
| மிட்ஸ் தீபம் | 500 |
| மிட்ஸ் பறம்புவிளை | 1200 |
| மிட்ஸ் சிறியக்காட்டுவிளை | 1000 |
| மிட்ஸ் கல்லறவிளை | 3220 |
| மிட்ஸ் வண்ணான்விளை | 1000 |
| மிட்ஸ் இன்பெண்ட் ஜீசஸ் | 2920 |
| பண்டாரவிளை | 3373 |
| கணியன்விளை | 1730 |
| கலங்கரைவிளை | 1000 |
| மிட்ஸ் பம்மம் | 1000 |
| மிட்ஸ் பொற்றவிளை | 1000 |
| மிட்ஸ் வின்னேர்ஸ் | 500 |
| வேம்பனாவிளை | 500 |
| வட்டவிளை | 1000 |
| மிட்ஸ் எழில் | 2000 |
| மிட்ஸ் கிறிஸ்துராஜா | 1300 |
| மிட்ஸ் மலையரம் | 1000 |
| மொத்தம் | **42238** |

## நாகர்கோவில் I

| | |
|---|---|
| மிட்ஸ் கல்கி | 7809 |
| மிட்ஸ் றேயல் | 5515 |
| அழகுமலர் அழகர்கோணம் | 1500 |
| இன்பெண்ட் ஜீசஸ் | 1050 |

நாட்டின் ஒற்றுமை சமூகத்தின் பலம் - விளாமிர் புடின்

| | |
|---|---|
| மிட்ஸ் மங்கை | 1000 |
| டாலியா அழகர்கோணம் | 1300 |
| பொன்மலர் தேனிக்குளம் | 2000 |
| மிட்ஸ் பேசில் | 1700 |
| மிட்ஸ் வேலுநாச்சியார் | 2000 |
| மிட்ஸ் அன்னா | 1000 |
| மொத்தம் | 24874 |

## நாகர்கோவில் II

| | |
|---|---|
| குமின்பருத்திவிளை | 14040 |
| மிட்ஸ் நோபல் | 3273 |
| சுகந்தம் பழவிளை | 1100 |
| மிட்ஸ் அத்திப்பூ | 900 |
| சிந்து ஆளூர்கிராமம் | 1000 |
| குறிஞ்சி | 550 |
| வசந்தமலர் | 3120 |
| ஸ்டார் ஆசாரிப்பள்ளம் | 3650 |
| றோஸ்மலர் | 2320 |
| யமுனா ஆசாரிப்பள்ளம் | 2600 |
| டைசிபிளவர் | 2405 |
| மிட்ஸ் செம்பகம் | 2270 |
| மிட்ஸ் ஜெயம் | 1000 |
| மொத்தம் | **38228** |

## குழித்துறை

| | |
|---|---|
| அரியூர்கோணம் | 500 |
| சூசைபுரம் | 1000 |
| சென்சூசையப்பர் | 1000 |
| சென் அன்றணி | 1000 |
| ஜீவஒளி | 1200 |
| விடியல் | 1000 |
| இடைக்காட்டுவிளை | 1000 |
| தேவிநகர் | 1500 |
| காட்டுவிளை I | 3610 |
| காட்டுவிளை II | 1030 |
| மிட்ஸ் குழந்தையேசு | 1000 |
| கண்ணக்கோடு | 1000 |
| கோலகாட்டுவிளை | 2150 |
| மிட்ஸ் அருவி | 1000 |
| மிட்ஸ் நுள்ளி | 1000 |
| பறக்காணிவிளை | 1590 |
| சகாயமாதா | 1000 |
| தென்றல் | 1200 |
| திட்டவிளை | 4000 |
| தாமரை | 1000 |
| தெற்றவிளை | 1000 |
| மிட்ஸ் வாணியன்விளை | 1000 |
| மிட்ஸ் வாணியன்விளை II | 700 |
| வலியவிளை I | 1000 |
| வலியவிளை III | 3370 |
| வள்ளிக்கோடு | 750 |
| வரவிளை | 2050 |
| பறம்புவிளை | 650 |
| நெல்வேலிஅக்ரி | 1000 |
| மிட்ஸ் காஞ்சிரம் விளை | 1000 |
| மிட்ஸ் றாவிளை | 1000 |
| மிட்ஸ் நெல்வேலிஅக்கிரி II | 1023 |
| மொத்தம் | **42323** |

## பளிச்சமூடு

| | |
|---|---|
| மிட்ஸ் கழுகன்காடு | 1700 |
| கீழ்மாங்கோடு | 2000 |
| கொல்லறமூலை | 1000 |
| கைதச்சாணி | 1340 |
| மிட்ஸ் பெத்லகேம் | 600 |
| மிட்ஸ் மார்ஸ்லீபா | 1600 |
| மிட்ஸ் இடைவிளாகம் | 1800 |
| மிட்ஸ் அம்பலகாலை | 10600 |
| மிட்ஸ் குளப்பாறை | 1000 |
| குளவிளை | 1500 |
| மிட்ஸ் ஓடல்விளை | 1800 |
| மிட்ஸ் மாங்கோடு | 1006 |
| மிட்ஸ் கரைக்காட்டுவிளை | 3000 |
| பாகோடு சுயஉதவிக்குழு | 900 |
| வலியவிளை சுயஉதவிக்குழு | 1400 |
| எள்ளுவிளை | 4300 |
| வளர்மதி | 1800 |
| மிட்ஸ் பறவிளாகம் | 1000 |
| குதிரவட்டம்காலை சுயஉதவிக்குழு | 1602 |
| ஆயிக்கோணம் | 1100 |
| மிட்ஸ் மரியன் | 500 |
| மொத்தம் | **41548** |

## தச்சூர்கோணம்

| | |
|---|---|
| ஸ்டார் ஜவறத்தோட்டம் | 1000 |
| தச்சூர்கோணம் | 1000 |
| மிட்ஸ் ஜவறத்தோட்டம் | 1000 |
| மிட்ஸ் சென்மேரிஸ் | 1000 |
| மிட்ஸ் காவூர்கோணம் | 700 |
| மிட்ஸ் சென்தோமஸ் | 1000 |
| மிட்ஸ் சாண்டிப்பாறை | 1000 |
| மிட்ஸ் நிலா | 500 |
| மிட்ஸ் தச்சூர்கோணம் | 500 |
| மிட்ஸ் அபினைய | 2283 |
| மிட்ஸ் ஜார்ஜ் நாகர் | 1800 |
| மிட்ஸ் தட்டான்கண்டம் | 1000 |
| மிட்ஸ் பந்தல்விளை | 500 |
| மிட்ஸ் கண்ணையர் | 600 |
| மிட்ஸ் வட்டவிளை | 2000 |
| குஞ்சால்விளை | 500 |
| தட்டன்விளாகம் | 1900 |
| முகவூர் | 1000 |
| நெடுங்குளம் | 1000 |
| மிட்ஸ் பிலாவிளை | 500 |
| மொத்தம் | **20783** |

## ஆற்றூர்

| | |
|---|---|
| சரல்விளை | 1500 |
| செட்டிவிளை | 672 |
| மிட்ஸ் பூங்காவனம் | 1000 |
| மிட்ஸ் செம்மண்விளை | 900 |
| மிட்ஸ் சென் பீட்டா | ‘850 |
| மிட்ஸ் தோட்டத்துவிளை | 500 |
| தெறம்புதட்டுவிளை | 1000 |
| கோனான்விளை | 1000 |
| பள்ளிக்கோணம் | 1000 |
| அன்னை | 2000 |
| தணுவந்தோப்பு | 500 |
| ஜாஸ்பின் வாலத்துவிளை | 1500 |
| பழந்தோட்டத்துவிளை | 1000 |
| மிட்ஸ் ஏஞ்சல் | 2010 |
| மாத்தூர்கோணம் | 1500 |
| மிட்ஸ் ரோஜாவனம் | 1800 |
| மிட்ஸ் சென்தோமஸ் | 1150 |
| சென்தேவசகாயம் | 2000 |
| பருத்திவிளை | 1600 |
| மிட்ஸ் ராஜீவ்காந்தி நகர் | 805 |
| வட்டவிளை | 1000 |
| வள்ளங்குழி | 1700 |
| மிட்ஸ் மூவாற்றுமுகம் | 800 |
| மிட்ஸ் கோட்டன்விளை | 1800 |
| பால்காரவிளை | 2000 |
| ஜீவ ஊற்று | 850 |
| பிடாரன்விளை | 1650 |
| விறாலிக்காட்டுவிளை | 2405 |
| தெற்றவிளை | 2560 |
| பூவக்காட்டுவிளை | 500 |
| மிட்ஸ் தேமானூர் | 3000 |
| நெடியதறவிளை சுயஉதவிக்குழு | 750 |
| பாரதம்விளை | 2940 |
| செம்பருத்தி | 1600 |
| ஓடல்விளை | 2258 |
| தீபாஞ்சான்காலவிளை | 1700 |
| தமிழரசி | 1004 |
| மிட்ஸ் வின்னிலா | 1054 |
| செம்பகதோப்புவிளை | 2000 |
| தானங்காட்டுவிளை | 2000 |
| மொத்தம் | **57858** |

## உண்ணாமலைக்கடை

| | |
|---|---|
| மிட்ஸ் மதர் தெரசா | 3130 |
| மிட்ஸ் புதுயல் | 3000 |

சமத்துவம் வளர்ச்சியின் அடிப்படை - ஆஞ்சலா மெர்கல்

| | |
|---|---|
| மிட்ஸ் பிச்சன்விளை | 1700 |
| மிட்ஸ் டாலியா புத்தன்தேரிவிளை | 1236 |
| மிட்ஸ் டோண் போஸ்கோ | 2325 |
| மிட்ஸ் முளாங்கூட்டுவிளை | 1300 |
| மேலவிளை | 1000 |
| மிட்ஸ் துலாவிளை | 1300 |
| மிட்ஸ் விறாலிக்காடு | 1000 |
| மிட்ஸ் நன்னீர் | 1000 |
| மிட்ஸ் கண்ணனூர் | 2100 |
| மிட்ஸ் ஆரோன் | 2840 |
| மிட்ஸ் அமலமாதா | 1200 |
| மிட்ஸ் இதயமலர் | 2335 |
| மிட்ஸ் வாரிக்காவிளை | 800 |
| மிட்ஸ் பூந்தோப்பு | 1000 |
| மிட்ஸ் பேன்சிபிளவர் | 1000 |
| மிட்ஸ் ஆனையடி II | 980 |
| மிட்ஸ் வானவில் | 1240 |
| மிட்ஸ் ஆனையடி I | 1110 |
| மிட்ஸ் வள்ளிக்காட்டுவிளை | 850 |
| மிட்ஸ் பனிமயமாதா | 2000 |
| மிட்ஸ் சகாயஅன்னை | 1700 |
| மிட்ஸ் செருப்பாலூர் | 2000 |
| மிட்ஸ் அடைக்கலமாதா | 500 |
| மிட்ஸ் கோல்டன் பிளவர் | 1000 |
| மொத்தம் | 39646 |

**பூதப்பாண்டி**

| | |
|---|---|
| பாரிஜாதம் | 2400 |
| எபனேசர் | 1000 |
| ஏதேன் | 1100 |
| மிட்ஸ் கஸ்தூரி பாய் கிராம் | 1800 |
| மிட்ஸ் பனானா | 1100 |
| மிட்ஸ் மங்கலம் | 500 |
| மிட்ஸ் ஞாலம் II | 3250 |
| மிட்ஸ் காருண்ணியா | 1600 |
| மிட்ஸ் மதிசயபாறைமாதா | 550 |
| மிட்ஸ் விண்ணரசிஅன்னை | 1220 |
| சீயோன் | 2300 |
| காரியாங்கோணம் | 1400 |
| மரியன் | 1835 |
| மிட்ஸ் றெங்கல்தௌபே | 1000 |
| மிட்ஸ் ஞாலம் பொற்றை | 500 |
| சங்கரலிங்கம்பாறை | 600 |
| ஏஞ்சல் சுயஉதவிக்குழு | 1088 |
| மிட்ஸ் ஞாலம் | 1200 |
| மிட்ஸ் ஞாலம் III | 300 |
| மிட்ஸ் ஞாலம் IV | 400 |
| எஸ்தர் 600மங்களம் II | 750 |
| ரிகோபத் | 1150 |
| சுடர் | 1210 |
| இந்திராநகர் சுயஉதவிக்குழு | 1300 |
| முக்கடல் | 651 |
| சரோன் | 1120 |
| மிட்ஸ் கடல் | 1944 |
| மிட்ஸ் ஞானதாசபுரம் | 1800 |
| மிட்ஸ் குருசடிகோணம் | 705 |
| மங்கலததுறை | 620 |
| மிட்ஸ் பிளசி | 1725 |
| மிட்ஸ் சிங்களோயர் | 2500 |
| அற்புதஅன்னை | 750 |
| மொத்தம் | 41968 |

**செல்லங்கோணம்**

| | |
|---|---|
| | 1000 |
| தாணிக்கோட்டவிளை | 1250 |
| குமரி நகர் | 2801 |
| லில்லிபிளவர் | 800 |
| மிட்ஸ் புதுகாடுவெட்டி | 3200 |
| சகாயநகர் | 5000 |
| கோனத்துவிளை I | 1800 |
| காட்டுவிளை IV | 1897 |
| வாளோடு I | 1500 |
| வாளோடு II | 900 |
| வாளோடு III | 500 |
| வாளோடு IV | 676 |
| மிட்ஸ் ஒயிட் றோஸ் | 800 |
| மிட்ஸ் பூமத்திவிளை | 1570 |
| விழுந்தையம்பலம் | 2500 |
| மிட்ஸ் அன்னை | 1500 |
| மிட்ஸ் ஸ்டார் | 1640 |
| மிட்ஸ் மல்லி | 1600 |
| மிட்ஸ் மருதம் | 1400 |
| மிட்ஸ் மாதாபுரம் | 1000 |
| மிட்ஸ் இடமலைக்கோணம் | 1000 |
| மொத்தம் | **34334** |

**ஏனைய பகுதிகள்**

| | |
|---|---|
| G Pay | 1710 |
| ஆசைபுரம் பகுதி - திரு. ஷாபின் | 5700 |
| களியக்காவிளை பகுதி - ஜிஜோஜின், விஜின் MSW மாணவர்கள் | 886 |
| மங்காடு பகுதி - திருமதி. சஜிதா | 1847 |
| தச்சூர்கோணம் பகுதி - திருமதி. ஷகிலா | 9355 |
| மரியகிரி பகுதி - திருமதி. புஷ்பலதா | 18150 |
| பாத்திமாநகர் பகுதி - திருமதி.ஷிஜி | 940 |
| பனச்சமூடு பகுதி - திரு.தேவராஜ் | 1810 |
| அடைக்காக்குழி பகுதி - திருமதி.பேபி மேரி | 3120 |
| கொட்டாரம் பகுதி | 2300 |
| சின்னத்துறை பகுதி - திருமதி. ஷைலா ராணி | 15000 |
| மேக்கோடு பகுதி - திருமதி. றீத்தம்மாள் | 1600 |
| திருமதி. கிறிஸ்டின்ராணி | 3272 |
| பாலவிளை கிளஸ்டர் | 370 |
| எஸ்.எஸ். ஸ்டோர் கிராத்தூர் | 5420 |
| ஆற்றூர் பகுதி | 3231 |
| உண்ணாமலைக் கடை பகுதி | 2170 |
| ஆதிச்சவிளாகம் பகுதி - திருமதி.பேபி | 2010 |

"01-02-2026 அன்று நடைபெற்ற புற்றுநோய் தின விழிப்புணர்வு நிகழ்வுகளில் தலைமை தாங்கி நடத்திய மற்றும் நிதிஉதவிகள் சேகரிக்க உதவிச் செய்த அனைத்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மருத்துவர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், தன்னார்வலர்கள், மிட்ஸ் தன்னார்வ பொறுப்பாளர்கள், களியக்காவிளை மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் செய்தித்தாளில் மிட்ஸ் புற்றுநோய் கையேடு விளம்பர அட்டை வைத்து பரிமாறிய முகவர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த பாராட்டுக்களும் நன்றியும் மிட்ஸ் குடும்பம் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்."

இவண்
**இயக்குநர் மிட்ஸ்**

### ☆☆☆ நன்றி ☆☆☆

அகில உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு 01-02-2026 அன்று மிட்ஸ் அளவில் நடத்திய விழிப்புணர்வு தின நிதிதிரட்டலில் அதிக அளவில் ரூ. 61,779/- நிதி திரட்டிய பாலவிளை கிளஸ்டர் அமைப்பாளர் திருமதி. சசிகலா அவர்களுக்கும் அவர்களோடு கரம்கோர்த்து உதவிய ஏனைய பாலவிளை கிளஸ்டர் நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி!

மேலும் தனிப்பட்ட மற்றும் குழுவாக சென்று அதிக அளவில் ரூ. 18,150/- நிதி திரட்டிய திருமதி. புஷ்பலதா (மரியகிரி பகுதி) அவர்களுக்கும், அவர்களோடு பயணித்த சுயஉதவிக்குழு மற்றும் கோல்பிங் குடும்ப உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

**இயக்குநர் மிட்ஸ் & மிட்ஸ் பணியாளர்கள்.**

ஒற்றுமையால் தான் சமூக முன்னேற்றம் சாத்தியம் - ஜவகர்லால் நேரு








20.01.2026 அன்று கோல்பிங் சார்பாக காஞ்சிபுரத்தில் வைத்து தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம் நடடைபெற்றது. இக்கூட்டத்தில் மார்த்தாண்டம் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு. சஜிகுமார் ஆகியோர் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் கோல்பிங் செயல்பாடுகளை சிறந்த முறையில் செய்துவருவதற்காக மிட்ஸ் நிறுவனத்திற்கு விருது வழங்கப்பட்டது. மட்டுமல்லாமல் அடோல்ப் கோல்பிங் பயிற்சி அரங்கம் 20.01.2026 அன்று திறப்புவிழா நடைபெற்றது. திறப்பு விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக கோல்பிங் மையத்தை சுற்றிலும் அனைத்து மறைமாவட்டங்களின் சார்பாக மரம் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நமது மறைமாவட்டத்தின் சார்பாக தேசிய இயக்குநருடன் இணைந்து மரம் நட்டு அவ்வளாகத்தில் பசுமையான சூழலை உருவாக்கியுள்ளோம்.



**ஜெர்மனி நாட்டிலிருந்து வருகை**

24.01.2026 அன்று கோல்பிங் சார்பாக ஜெர்மனி நாட்டிலிருந்து 32 நபர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்து கோல்பிங் மற்றும் மிட்ஸ் செயல்பாடுகளை பார்வையிட்டனர். அவர்களை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் மிட்ஸ் பணியாளர்கள், கோல்பிங் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தளிர்கள் உலக பயனாளிகள் வரவேற்று, உபசரித்து, கவுரவித்தனர்.

## தளிர்கள் உலகம் - கிறிஸ்மஸ் விழா







தளிர்கள் உலக பயனாளிகளுக்கான கிறிஸ்மஸ் தின விழாவானது 06.12.2024 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், ஆசிரியை அனிதா, ஆசிரியர் ரகுலால், திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. வினிதா ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவன் அஜய் விருந்தினர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார். மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அளித்து மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து வழங்கியதுடன் மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வினையும் துவங்கி வைத்தார்கள். மாணவி செலின் மேரி கிறிஸ்மஸ் செய்தி அளித்தார்கள். பின்னர் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், ஆசிரியை அனிதா ஆகியோர் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தார்கள். பின்னர் குழந்தைகள் தின விழாவின் போது நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், ஒழுங்காக வகுப்புகளில் கலந்து கொண்ட தாய்மார்களுக்கும், மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் கிறிஸ்மஸ் பரிசுகள் வழங்கப்பட்டன. இடையிடையே மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து 185 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 1,85,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ்விழாவில் 185 தாய்மார்களும், 112 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

- 10.01.2026 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு செல்வி தாரணி அவர்களால் பண மேலாண்மை குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகளில் 37 மாணவர்களும் 19 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.
- 14.02.2026 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கான சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. தாய்மார்களுக்கு செல்வி தாரணி அவர்களால் சமூக ஊடகங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிகளில் 48 மாணவ மாணவிகளும், 33 பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

## மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு

1. 28.12.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய இடங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 68 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.
2. 25.01.2026 அன்று தளிர்கள் உலகம் மாணவர்களுக்கான அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, நாகர்கோவில் மற்றும் ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வினை 83 மாணவ மாணவிகள் எழுதினர்.
3. 22.02.2026 அன்று தளிர்கள் உலகம் மாணவர்களுக்கான அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, நாகர்கோவில் மற்றும் ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வினை 104 மாணவ மாணவிகள் எழுதினர்.

**நலத்திட்ட உதவித்தொகை :** 07.02.2026 அன்று All for Life மற்றும் Förderverein திட்டத்தின் கீழ் பயன்பெறும் 23 பயனாளிகளுக்கு சிறப்பு உதவித்தொகையாக ரூபாய் 1,36,880/- வழங்கப்பட்டது.

## மரியன் இயக்கம் - கடன் உதவி வழங்குதல்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் மரியன் இயக்கமானது மிட்ஸ் பணி மண்டலங்களுக்குட்பட்ட கைம்பெண்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் கடன் உதவிகள் வழங்கி வருகிறது. 25.02.2026 அன்று இந்த கைம்பெண்களுக்கு வட்டியில்லா கடன் உதவி வழங்கும் நிகழ்வானது நடைபெற்றது. திருமதி. அபிஷா அஷ்வின் அவர்கள் பெண்களின் முன்னேற்றம் குறித்து ஒரு மணி நேர கருத்தரங்கு நடத்தினார்கள். தொடர்ந்து பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கடன் உதவி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பயனாளிகளை ஊக்குவித்தார்கள். தொடர்ந்து பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் பயனாளிகளை வாழ்த்தி கடன் உதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள். மொத்தம் 102 பயனாளிகளுக்கு பல்வேறு சிறுதொழில்கள் செய்ய மொத்தம் ரூ. 20,60,000/- கடன் உதவியாக வழங்கப்பட்டது.







## பிற நிகழ்வுகள்

05.02.2026 அன்று ஆற்றூர் டிவைன் மெர்சி அரங்கத்தில் வைத்து சமூகவளர்ச்சி திட்டங்கள் குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. NIIT Foundation - ல் இருந்து செல்வி தாரணி மற்றும் செல்வி மார்ட்டினா ஆகியோர் வருகை தந்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்களும் அவற்றை பெறும் வழிமுறைகளும் குறித்து விளக்கமளித்தார்கள். இந்த நிகழ்வில் மிட்ஸ் பயனாளிகள், சுய உதவி குழு உறுப்பினர்கள் என மொத்தம் 44 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதே நிகழ்வு 12.02.2026 அன்று நடைக்காவு ஆலய வளாகத்திலும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 53 பேர் கலந்துகொண்டனர்.




மனித உரிமை பாதுகாப்பே அமைதியின் அடித்தளம் - ஆங் சான் சூ கீ

## மிட்ஸ் விருட்சம் நுண்கடன் திட்டம்

மிட்ஸ் செயல் திட்டங்களில் ஒன்றான மிட்ஸ் விருட்சம் திட்டத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக 2026 முதல் ஒவ்வொரு குழுக்களுக்கு ரூபாய் 300000 கடனுதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் வழியாக மக்களின் பல்வேறு வாழ்வாதாரங்கள் மேம்பட இத்திட்டம் ஒரு கடனுதவித்திட்டமாக செயல்பட்டு வருகிறது.

| குழு | பயனாளி | தொகை (ரூ.) |
|---|---|---|
| **கனியக்காவிளை - டிசம்பர் 2025** | | |
| 10 | 40 | 20,00,000/- |
| **நாகர்கோவில் - ஜனவரி 2026** | | |
| 10 | 50 | 30,00,000/- |
| **மதுரை - பிப்ரவரி 2026** | | |
| 9 | 135 | 27,00,000/- |

## மிட்ஸ் ஜீவன் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் அதிகமாக உள்ளதால் நோயாளிகள் மற்றும் அவர்களை சார்ந்த குடும்பம் மிகவும் பணத்தேவைகளால் இன்னலடைகின்றனர். இவர்களின் தேவைகளில் ஒரு சிறுபகுதியை நிவர்த்தி செய்வதற்காக மிட்ஸ் ஜீவன் திட்டம் கைகொடுக்கிறது. இவ்வருடம் 2026-ல் மொத்தம் 37 நோயாளர்களின் குடும்பத்திற்கு மொத்தம் ரூ.215000 உதவித்தொகையாக 24-02-2026 அன்று மிட்ஸ் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது. உதவித்தொகை பெற வந்த நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், மருத்துவமனைகள் குறித்த தகவல்கள் அடங்கிய குமரி புற்றுநோய் கையேடும் வழங்கப்பட்டன. புற்றுநோய் பாதிப்புக்குள்ளானவர்களின் உடல்நலனை மீட்டெடுக்கும் உன்னத நோக்கில், அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க 1 கிலோ எடையுள்ள சரிவிகித ஊட்டச்சத்து மாவு வழங்கப்பட்டது. சிகிச்சையினால் ஏற்படும் உடல் சோர்வை நீக்கி, தன்னம்பிக்கையுடனும் ஆரோக்கியத்துடனும் அவர்கள் மீண்டுவர இந்தச் சிறு உதவி பேருதவியாய் அமைந்தது.

## மிட்ஸ் குடும்ப வளர்ச்சித்திட்டம்

மிட்ஸ் குடும்ப வளர்ச்சித்திட்ட பயனாளிகளின் வழிகாட்டுதல் பயிற்சியானது மிட்ஸ் அரங்கத்தில் வைத்து 02-03-2026 முதல் 6-03-2026 வரை 4 தினங்களில் பயிற்சிகள் நடைபெற்றன. பயிற்சியாளர் முனைவர் அரசு, சன்லைட் வெல்னஸ் மையம், நாகர்கோவில் அவர்களால் பயனாளிகளுக்கு வருவாய் ஈட்டும் தொழில் செய்ய பயிற்சிகள், பெற்றோர்களுக்கு வளரிளம் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு குறித்தான பயிற்சி, உள்ளார்ந்த தன்னம்பிக்கை பயிற்சிகள் மற்றும் உடற்பயிற்சி ஆகிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இந்த கூடுகையினை மிட்ஸ் இயக்குநர் முனைவர் ஜெறோம் அடிகளார் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்கள். வாழ்த்துரை திரு. ஷாஜன் ஜோசப் திட்ட அலுவலர் அவர்களும் நிகழ்த்தினார்கள். மேலும் அன்றைய தினம் குறித்தான நிகழ்வுகளையும், குடும்ப வளர்ச்சித்திட்டத்தின் முன்னோக்கிய செயல்பாடுகள் குறித்தான வழிகாட்டுதல்களையும் தொகுத்து ஒருங்கிணைப்பாளர் திருமதி. வினிதா மற்றும் திருமதி. ஜெசீந்தா அவர்களும் வழங்கினார்கள். ஒவ்வொரு நாளும் பயனாளிகள் தொழில் செய்து வருவதின் அனுபவமும், அன்றைய தினத்தின் அனுபவமும் பகிர்ந்து கொண்டார்கள். மேற்குறிப்பிட்ட தினங்களில் பயனாளிகள் கூடுகை கூட்டமானது காலை 10.00 தொடங்கி மதியம் 1.00 மணிக்கு நிறைவுற்றது. குடும்ப வளர்ச்சி திட்ட **MR** பயனாளிகள் 224 மற்றும் MA பயனாளிகள் 215. ஆக மொத்தம் 439 நபர்கள் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் அனைவருக்கும் தேநீரும், மதிய உணவும் வழங்கப்பட்டது.



## நினைவஞ்சலி

மிட்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவாழ்வு சங்கத்தின் கிராத்தூர் அமைப்பாளர் **திருமதி. சரோஜினி** அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தனது பணி நாள் முழுவதும் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அன்னாரின் சேவை என்றும் போற்றுதலுக்குரியது. சீரிய நிர்வாகத்தாலும், அன்பான வழிகாட்டுதலாலும் நம் அனைவரது நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பிடித்திருக்கும் அவரது நற்பணிகள், வரும் காலங்களில் நமக்கு என்றும் உந்துசக்தியாக விளங்கும். பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா இறைவனடி சேர்ந்து சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.




**திருமதி. சரோஜினி**
பிறப்பு : 05-1-1947
இறப்பு : 15-3-2026

ஒற்றுமை சமூகநீதி உருவாக்கும் - லால் பகதூர் சஸ்திரி

# மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டம் (MMWS)

மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டத்தில் மிட்ஸ் சுயஉதவிக்குழு மற்றும் கோல்பிங் குடும்ப உறுப்பினர்களாக மொத்தம் 8841 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் புதுப்பித்தல் உறுப்பினர்களாக 7978 மற்றும் புதிய உறுப்பினர்களாக 868 நபர்கள் ஆவார்கள். 2026 ஆம் ஆண்டு இறப்பு வாயிலாக காலம் சென்ற 13 உறுப்பினர்களின் வாரிசுக்கு தலா ரூ. 12500/- வைத்து காசோலையானது மொத்தம் ரூ.162500/- வழங்கப்பட்டது.



பெயர் : பாலஸ் K
கோல்பிங் பெயர் : ஆற்றூர் IV
பிறந்த நாள் : 08/6/1947
இறந்த நாள் : 23/12/2025



பெயர் : தெரசம்மா
குழுப்பெயர் : ஆதிச்சவிளாகம்
பிறந்த நாள் : 15/02/1953
இறந்த நாள் : 3-12-2025



பெயர் : மேரி
குழுப்பெயர் : மஞ்சத்தோப்பு
பிறந்த நாள் : 01/01/1953
இறந்த நாள் : 3/12/2025



பெயர் : கலா
குழுப்பெயர் : இந்திராநகர்
பிறந்த நாள் : 27/12/1967
இறந்த நாள் : 20/12/2025



பெயர் : ராணி
குழுப்பெயர் : தச்சன்விளாகம்
பிறந்த நாள் : 5/6/1963
இறந்த நாள் : 6/1/2026



பெயர் : ராஜதங்கம்
குழுப்பெயர் : மிட்ஸ் சரோன்
பிறந்த நாள் : 01/01/1970
இறந்த நாள் : 16/01/2026



பெயர் : தேவநேசம்
குழுப்பெயர் : பொன்மலர் தேனிக்குளம்
பிறந்த நாள் : 10/4/1962
இறந்த நாள் : 5/12/2025



பெயர் : ஆ.சந்திரா
குழுப்பெயர்: மிட்ஸ் வானோடு II
பிறந்த நாள் : 21-01-1966
இறந்த நாள் : 16-01-2026



பெயர் : P. யசோதா
குழுப்பெயர் : கோட்டவிளை I
பிறந்த நாள் : 21-06-1952
இறந்த நாள் : 31-01-2026



பெயர் : விஜிலா D
குழுப்பெயர் : மிட்ஸ் நடுத்தேரிவிளை
பிறந்த நாள் : 01-06-1979
இறந்த நாள் : 23-01-2026



பெயர் : ஐடா
குழுப்பெயர் : மிட்ஸ் எழுமான்விளை
பிறந்த நாள் : 01-01-1972
இறந்த நாள் : 20-01-2026



பெயர் : ரோசம்மா
குழுப்பெயர் : மிட்ஸ நெடியவிளை
பிறந்த நாள் : 19/07/1956
இறந்த நாள் : 10-01-2026



பெயர் : கமலம்
குழுப்பெயர் : மிட்ஸ் பாலவிளை I
பிறந்த நாள் : 10-02-1960
இறந்த நாள் : 27-01-2026



பெயர் : T. மேரி சுஜா
குழுப்பெயர் : பண்டாரக்காடு
பிறந்த நாள் : 26-05-1976
இறந்த நாள் : 25-01-2026

**இவர்களின் ஆன்மா என்றும் இறைவனின் கரங்களில் நித்திய இளைப்பாற்றி பெற குடும்பத்தினர் மற்றும் மிட்ஸ் குடும்பம் சார்பாக ஆழ்ந்த இரங்கலும், செபங்களும் ஐக்கியசுடர் இதழ் வழியாக தெரிவித்துக்கொள்கிறோம்.**

சமத்துவம் உள்ள இடத்தில் அமைதி நிலைக்கும் - பழமொழி

## விண்ணைத்தொடு திட்டம் CTWWC

12.01.2026 மற்றும் 13.01.2026 ஆகிய இரு தினங்கள் விண்ணைத் தொடு திட்டத்தின் காலாண்டு ஆய்வு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தை CRS பணியாளர்களான செல்வி சஞ்சனா மற்றும் திருமதி. ரம்யா ரஞ்சன் மிஸ்ரா ஆகியோர் வழிநடத்தினர். இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு மறைமாவட்டங்களிலும் உள்ள 26 விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## மகளிர் தினவிழா

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் சுயஉதவிக்குழுக்களின் மகளிர் தினவிழாவானது, 2026ஆம் ஆண்டைய உலகளாவிய மகளிர் தின கருப்பொருளாகிய "**உரிமை, நீதி மற்றும் செயல்**" ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 7-3-2026 அன்று புனித அந்தோணியார் ம.சி.க நடுநிலைப்பள்ளி மெதுகும்மல் வளாகத்தில் வைத்து மதியம் 2.00-க்கு பேரணியுடன் ஆரம்பிக்கப்பட்டது. பேரணியை மிட்ஸ் களியக்கவிளை பணிமண்டல இயக்குநர் அருட்தந்தை. ஜோஸ் பாறவிளை அடிகளார் தொடக்கவுரையாற்றி, பலூண் அசைத்து தொடங்கி வைத்தார். பேரணியில் பாலவிளை கிளஸ்டர் சார்பாக பறையடித்தும், பேரணியாகவும், மகளிரை பற்றிய வீர வாக்கியங்கள் அச்சிடப்பட்ட பதாகைகள் (ஒலிப்பெயர்ப்பு) மற்றும் மகளிர் தினவிழா வாழ்த்துகள் பொறிக்கப்பட்ட பலூண்களுடன், நடைக்காவு மலங்கரை கத்தோலிக்க ஆலய கம்யூனிட்டி அரங்கத்தில் சென்றடைந்தது. பின்னர் தொடங்கிய பொதுக்கூட்டத்தில் இறைவணக்கப் பாடல் சின்னத்துறை கிளஸ்டர் உறுப்பினர்களால் பாடப்பட்டது. திருமதி. சஜிதா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸ் திட்டங்களைப்பற்றியும், மகளிர் அனைவரையும் வாழ்த்தி தொடக்கவுரையாற்றினார். பின்னர் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் தலைமையுரையாற்றப்பட்டது. சின்னத்துறை பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் திருமதி. லீலா விஜூ அவர்கள் மகளிர் தினவிழா எச்சூழலில் எப்படி கொண்டாட துவங்கியது பற்றி சிறப்புரையாற்றினார். மிட்ஸ் சுயஉதவிக்குழுக்களில் 5 சிறப்பான சவால்களை சாதனையாக்கிய சாதனையாளர்களுக்கு கீரீடம் அணிவித்து ஆயர் மற்றும் சிறப்பு விருந்தினரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் முனைவர் அருட்தந்தை ஜெறோம் அடிகளார் மற்றும் தமிழக சமூகப்பணி பெண்கள் கூட்டமைப்பின் செயலர் திருமதி. சோபனா அவர்களும் விழா மேடையில் வீற்றிருந்தனர். பின்னர் திருமதி. ஷீஜா மிட்ஸ் அரசி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற விழாவானது நாட்டுப்பண்ணுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது. விழாவில் களியக்காவிளை பணிமண்டல ஒவ்வொரு சுயஉதவிக்குழுக்களிலிருந்து மூன்று நபர்கள், மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவில் பணிமண்டலத்தின் கிளஸ்டர் பொறுப்பாளர்கள் என மொத்தம் 700 நபர்கள் கலந்து கொண்டார்கள். விழாவின் இறுதியில் பங்கெடுத்தவர்களுக்கு இனிப்புப் பொட்டலமும் தேனீரும் வழங்கப்பட்டது.



# 2026-ஆம் ஆண்டு மிட்ஸ் மகளிர் தினவிழாவின் சாதனையாளர்களாகிய கதாநாயகிகளின் வாழ்க்கை அனுபவங்கள் . . .

**1, கடின உழைப்பாளி**



| | | |
|---|---|---|
| பெயர் | : | D.மேரி ஷீபா |
| வயது | : | 45 |
| குழுவின் பெயர் | : | தாணிப்பழஞ்சி |
| கிளஸ்டர் | : | கிராத்தூர் |

இவர் AKG நகர், கொல்லங்கோடு, வள்ளவிளை அஞ்சலில் வசித்து வருகிறார். மூன்று குழந்தைகள் உள்ளனர். மேரி எலிசபெத், வயது 21. General Nursing படித்து முடித்து விட்டு, தற்போது ஜெர்மன் மொழி பயிலுவதற்காக திருவனந்தபுரம் மையத்தில் சேர்ந்துள்ளார்கள். மகன்கள் M. ஆன்றனி சாமுவேல் வயது-19, மற்றும் ஆ.மைக்கிள் டானியேல் வயது-19. இருவரும் பாளையங்கோட்டை St. Xavier கல்லூரியில் இரண்டாம் ஆண்டு BBA பயின்று வருகின்றனர். மகன்கள் இருவரும் இரட்டையர்கள் ஆவர். .மேரி ஷீபாவுக்கும் இவரது கணவர் மரிய லூயி பிரகாசம் என்பவருக்கும் 18-9-2003 அன்று திருமணம் நடந்தது. மேரி ஷீபாவுக்கு 28 வயதும், மகன்களுக்கு மூன்று வயது இருக்கும் போது இவரது கணவர் லட்சம் ரூபாய் கடன்களோடு வாடகை வீட்டில் இவரையும் குழந்தைகளையும் விட்டு சென்றார். இவரது கணவர் விட்டு சென்றதால் வாடகை வீட்டிலிருந்து இவர் களையும் குழந்தைகளையும் வெளியேற்றினர். அப்போது இவருக்கு அறிமுகமானவர் அவரது வீட்டில் தங்க இடம் கொடுத்தார். அதற்கு ஈடாக அவரது வீட்டு வேலைகள் மற்றும் வீட்டில் வளர்த்த பசுக்களையும் கவனித்து வந்தார். சிறிது காலத்துக்கு பின்பு அந்த வீட்டிலிருந்து மேரி ஷீபாவையும் குழந்தைகளையும் அந்த வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டனர். பின்பு, வேறு வாடகை வீடு எடுத்து தங்கினர். இப்போது ஒருநாள் மூன்று வீடுகளில் வீட்டு வேலை செய்வார். போதிய வருமானம் இல்லாததால்,ஹோட்டலிலும் வேலை செய்தார். ஹோட்டலில் இருந்து கிடைக்கும் மீதி உணவை குழந்தைகளுக்கு கொடுத்து, பசியாற்றி வந்தார். கிடைக்கும் நேரங்களில் தையல் தொழில் கற்றார். தையல் தொழில் கற்கும் போது அருகில் இருந்த அழகு நிலையத்தில் சென்று அழகுக்கலை பயிற்சி பெற்றார். இவரது உழைப்பால் மூன்று சென்ட் நிலம் வாங்கி, IMS பணியாளர்களின் உதவியுடன் ஆஸ்பெட்டாஸ் கூரையால் வீடும் கட்டியுள்ளார். அந்த நேரத்தில் இவரது கணவர் வாங்கிய கடனை கொடுக்காததால் கடன் கொடுத்தவர்கள் அடித்ததில் இவரது கால் அதிக பாதிப்பு அடைந்தது. மீண்டும் வேலைக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், தான் கற்ற தையல் மற்றும் அழகு கலையை வைத்து Beauty Parlour துவங்க முடிவு செய்து, ISM பணியாளர்கள் உதவியுடன் சிறிய அளவிலாக கொல்லங்கோடு, கண்ணாநாகம் சந்திப்பில் Beauty Parlour துவங்கினார். இவர் தாணிப்பழஞ்சி குழுவின் தலைவராக தற்போது செயல்பட்டு வருகிறார். 2025 ஏப்ரல் மாதம் சேமிப்பு பிரித்து எடுத்துள்ளனர். தற்போது ரூபாய் 16900 சேமிப்பும் குழுக்கடன்ரூபாய் 25000-ம் வங்கிக்கடன் ரூபாய் 85600-ம் பெற்று, இவரது தொழிலை மேம்படுத்தி வருகிறார். இவரது அயராத உழைப்பின் காரணமாக தற்போது Blesh Beauty Parlour என்ற பெயரில் கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளையிலும் ஒரு கிளை துவங்கி இரண்டு பெண்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளார். இந்த அழகு நிலையங்கள் மூலம் இவருக்கு மாதம் தோறும் சராசரியாக 30000 ரூபாய் வருமானம் வருகிறது. இதனை வைத்து, குழுக்கடன்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி செலவையும் சந்தித்து வருகிறார். இவரை மிட்ஸ் நிறுவனம் "கடின உழைப்பாளி" என்ற விருதை வழங்கி கௌரவிக்கிறது.

**2, மிட்ஸ் பணி தன்னார்வலர்**



J. நீத்தம்மாள் இவர் சின்னத்துறை பகுதியை சார்ந்தவர். இவருக்கு வயது 59. இவரது கணவர் தனிசிலாஸ். அவர் இறந்து 6 வருடங்கள் ஆகின்றன. இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

இவர் சமூக காரியங்களில் தலைமைத்துவம் எடுத்து, சமூக ஆர்வலராக செயல்படுகின்றார். புற்றுநோய் விழிப்புணர்வு கூட்டங்களில் கலந்துகொண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வாங்கி கொடுப்பதிலும், மருத்துவமனை பற்றிய ஆலோசனைகள் வழங்குவதிலும் ஒரு சமூக ஆர்வலராக காணப்படுகின்றார். மேலும், புற்றுநோய் விழிப்புணர்வு தின நிதி திரட்டலில் பங்கெடுத்து, இந்த வருடம், பிப்ரவரி 1ம் நாள் ரூபாய் 15000 பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டி, மிட்ஸ் நிறுவனத்தில் ஒப்படைத்தார்கள்.

மேலும், மிட்ஸ் குழுக்களில் எந்த வித கடன்பாக்கியும் இல்லாமல், சின்னத்துறை கிளஸ்டர் தலைவியாக செயல்பட்டு வருகிறார். இவரது பணியைப் பாராட்டி இவருக்கு "மிட்ஸ் பணி தன்னார்வலர்" என்ற விருது வழங்கப்படுகிறது.

**3, சமூகப் பணி தன்னார்வலர்**
**(Social work Volunteer)**



திருமதி. G. பேபி மேரி அவர்கள் 60 வயதானவர். அடைக்காக்குழி பகுதியை சார்ந்தவர். இரண்டு மகன்கள் உள்ளனர். திருமணமானவர்; கணவர் ஓய்வு பெற்ற கல்லூரி பணியாளர்.

சேவை உணர்வு கொண்ட திருமதி. பேபி மேரி அவர்கள் கஷ்டப்படும் நபர்களுக்கு உதவி செய்வதில் வல்லவர். குறிப்பாக, புற்றுநோயால்

பின்தங்கியவரை முன்னேற்றுவதுதான் உண்மையான சமூக நீதி - மு.கருணாநிதி

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிச் செய்வதிலும், மருத்துவமனைகளுக்கு வழிகாட்டுதலிலும் ஆர்வத்தோடு ஈடுபடுபவர். மிட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, புற்றுநோயாளிகளுக்கு உதவும் நல்ல உள்ளத்துடன், கடைகளிலிருந்து மாதந்தோறும் ரூபாய்கள் சேகரித்து மிட்ஸ் அலுவலகத்தில் ஒப்படைத்து வருகிறார்.

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, மக்களுக்கு விழிப்புணர்வை வருடந்தோறும் ஏற்படுத்தி வருகிறார். அத்துடன், பிற ஊர்மக்களிட மிருந்து ரூபாய் சேகரித்தும் மிட்ஸ் அலுவலகத்தில் ஒப்படைத்து வருகிறார்.

மேலும், தனது வீட்டிலும் மிட்ஸ்க்கான ஓர் உண்டியல் வைத்து, காசு சேகரித்துக் கொடுக்கின்றார். இவர் அடைக்காக்குழி கோல்பிங் குடும்பத்தை சார்ந்தவர். கோல்பிங் Board Member ஆக சுமார் 4 வருடங்கள் சேவை செய்தவர்.

இவர் ஒரு இயற்கை ஆர்வலர். தனது வீட்டைச் சுற்றிலும் வீட்டுத்தோட்டங்கள் அமைத்து பிற உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாக உள்ளார். மண்புழு உரத்தை தனது இல்லத்திலேயே தயாரித்து காய்கறி களுக்கும், செடிகளுக்கும் பயன்படுத்தி வருகிறார். யாரிடமும் எந்த ஒரு உதவியும் எதிர்பாராமல் சேவை உள்ளத்துடன், தன் சொந்த செலவில், இவர் செய்து வரும் சமூகப்பணியை பாராட்டி, மிட்ஸ் நிறுவனம் இந்த பெண்கள் தினவிழாவில் திருமதி.பேபி மேரி அவர்களை சிறந்த "சமூகப்பணி தன்னார்வலர்" என்று கௌரவிக்கிறது.

**4. இயற்கை விவசாயி**



திருமதி.P. செல்வி என்பவர் பாலவிளை கிளஸ்டர் மாவறத்தலை குழுவின் உறுப்பினர். இவரது கணவர் பெயர் சுகுமாரன். திருமணமடைந்த 2 மகன்கள் உள்ளனர்.இவர் தனது கணவர் சுகுமாரனோடு 2வது மகன் ராஜேஷ் என்பவரின் வீட்டில் வசித்து வருகிறார்.

இவர் 20-04-1999 அன்று முதல் குழுவில் செயல்பட்டு வருகிறார். சேமிப்பு ரூ.1,70,000/- இரண்டு முறையாக பிரித்து எடுத்துள்ளார். தற்போது, இவரது சேமிப்பு கணக்கில் ரூ.34300/- உள்ளது. குழுவில் பல முறை கடன் பெற்று, சரியான முறையில் திருப்பி கட்டியுள்ளார். Federal வங்கியிலிருந்து வங்கிக்கடன் பெற்றுள்ளார்.

இவர் தனது மகனுக்கு (ராஜேஷ்) சொந்தமான 59 சென்ட் நிலத்தில், முழுமையாக விவசாயம் செய்து வருகிறார். இவரது, கணவர் மற்றும், இரண்டாவது மருமகள் ஷாலினி ஆகியோர் இணைந்து விவசாயத்தை கவனித்து வருகின்றனர். வாழை, கோவைக்காய், கீரைவகைகள், பயறு வகைகள், வெண்டைக்காய், வழுதனங்காய்,கத்தரிக்காய் போன்றவை பயிர் செய்து வருகின்றனர். இவற்றை வள்ளவிளை சந்தையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் கொண்டு சென்று, திருமதி. செல்வி என்பவர் விற்பனை செய்து வருகிறார். இவர் தனது குடும்பத்துடன் 27 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார். இந்த விவசாயம் இவரது இரண்டு பிள்ளைகளின் எதிர்காலத்தை உருவாக்க உதவியாகவும் இருந்தது எனவும், தற்போது, தங்கள் வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை இத்தொழில் வாயிலாக ஈட்ட முடிகிறது எனவும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். முழு நேரமும் விவசாயத்திற்காக தன்னையும் தன் குடும்பத்தையும் ஈடுபட வைத்துள்ள, திருமதி. செல்வி அவர்களை மிட்ஸ் நிறுவனம் "இயற்கை விவசாயி" என கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

**5. நோயை வென்றவர்**



**திருமதி. N. லில்லி,** பாத்திமா நகர்.

புற்றுநோய் என்பது தொற்றுநோய் அல்ல. புற்றுநோய் என்பது உடல் செல்களில் அசாதாரண மாற்றங்களால் ஏற்படும் நோயாகும். இன்றைய மருத்துவ உலகில், புற்றுநோயை பூரணமாக குணப்படுத்த இயலும் சூழல் உள்ளது. புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிட்சையளிப்பது சிறந்தது.

இந்நோயிலிருந்து மீண்டு வந்த நபர்களில் ஒருவர், பாத்திமா நகர் பகுதியை சார்ந்த திருமதி. N. லில்லி அவர்கள். இன்னாரது வயது 65. இவர்களுக்கு மிட்ஸ் வழியாக மருத்துவ உதவி வழங்கப்பட்டது. நான்கு வருடங்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, திருவனந்தபுரம், RCC மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று, நோயிலிருந்து பரிபூரணமாக நலம் பெற்றுள்ளார்கள். இவர்களின் குடும்பத்தார் இவர்களை கனிவுடன் கவனித்தும், மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகள், தொடர் சிசிட்சைகள் செய்ததின் பயனாக, பூரண நலன் பெற்றுள்ளார்கள். இன்று, நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் தனது கணவர் மற்றும் பிள்ளைகளுடன் சந்தோஷமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களுக்கு மிட்ஸ் ஜீவன் திட்டத்திலிருந்து சுய தொழில் செய்வதற்காக 03-01-2025 அன்று ரூபாய் 15,000/- வழங்கப்பட்டது. இவர்கள் இந்த தொகையுடன் ஒரு பசு வாங்கினார்கள். இவர்களின் வீட்டில் ஏற்கனவே ஒரு பசு இருந்தது. இரண்டு பசுக்களையும் சிறப்பாக கவனித்து, பொருளாதாரத்தில் முன்னேறி வருகிறார்கள். இவர்களின் இத்தொழிலுக்கு கணவர் மற்றும் பிள்ளைகள் உறுதுணையாக இருக்கிறார்கள். நோயிலிருந்து மீண்டு, தன்னம்பிக்கையுடன் சுயதொழில் மேற்கொண்டு வரும், திருமதி லில்லி அவர்களை, மிட்ஸ் நிறுவனம் "நோயை வென்றவர்" என விருது வழங்கி சிறப்பிக்கிறது.

ஒவ்வொருவருக்கும் சம வாய்ப்பு கிடைப்பதே நீதி - கமலா ஹாரிஸ்

குலுக்கல் முறையில் பரிசு பெறுவீர்

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 | ■ |
| 3 | | ■ | 4 | | | 5 | | | 6 |
| | | | | | | | | | 7 |
| | 8 | | | | 9 | | ■ | | 10 |
| | | | ■ | 11 | 12 | | | | |
| | | 13 | 14 | 15 | | 16 | | 17 | |
| | 18 | | | | 19 | | | | 20 |
| | 21 | | 22 | | | | | | |
| | | | | | | 23 | | | |
| 24 | | 25 | | | | 26 | 27 | 28 | |

**இடமிருந்து வலம்**

1. "பழங்களின் ராஜா" என்று அழைக்கப்படும் பழம் எது? (5)
12. குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு எது? (4)
15. இரண்டு இரைப்பைகளைக் கொண்ட பிராணி எது? (2)
22. தன்னுடைய எடையைப் போல் இருபது மடங்கு எடையைத் தூக்கும் ஆற்றல் மிக்க உயிரினம் எது? (4)

**வலமிருந்து இடம்**

2 முன் கழுத்து கழலை நோயை குணப்படுத்த உதவும் ஐசோடோப்பு? (5)
6. வனப்பு எனும் சொல்லின் பொருள்? (3)
7. அக்கானி .................... (4)
14. இந்தியாவின் தேசிய காலண்டர் எது? (2)
19. காந்திஜி உருவம் பொறித்த அஞ்சல் அட்டையை முதலில் வெளியிட்ட நாடு எது? (4)
23. புனித நகரம் என்று அழைக்கப்படுகிறது? (5)
26. நீதிமன்றத்தில் வாதிடுபவர் யார்? (4)

**மேலிருந்து கீழ்**

3. எந்த நாட்டு மக்கள் அதிகமாக தேநீர் அருந்துகிறார்கள்? (4)
4. உலகிலேயே மிகச் சிறிய தீவாக உள்ள நாடு எது?
5. விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு எது? (4)
10. நீரின் அடியில் உள்ள மலைகளின் உயரப்பகுதி எது? (3)
16. தமிழ்நாட்டின் மாநில மீன் எது ?
20. முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை. மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கைத் தேவை. (4)
21. சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ................ பயிற்சிகள் வழங்கப்படும். (3)

**கீழிருந்து மேல்**

8. குழந்தைகளின் உடற்பயிற்சி எது? (4)
9. பெண்கள் சுயஉதவி குழு என்பதன் குறுக்கெழுத்து - (3)
11. பத்து பக்கங்களைக் கொண்ட ஒருவடிவம் ......... எனப்படும் - (5)
13. காலநிலையை பாதிக்கும் முக்கிய வாயு எது? (4)
17. சோடியம் ஹைட்ராக்சைடு ............... தயாரிக்கப் பயன்படுவது?(3)
18. இந்தியாவின் தேசிய காய்கறி .............க்காய் ஆகும்? (3)
24. அரசியின் மணிமுடி என்று எதனை அழைக்கிறார்கள்? (5)
25. குழந்தைகளின் முதல் ஆசிரியர் யார்? (3)
27. "Calculator" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சரியான தமிழ்ச்சொல்? (5)
28. சுயஉதவிக் குழுக்களுக்கு உதவும் தேசிய நிறுவனம் எது? (4)

குறிப்பு :

சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வுசெய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 2026 மே 26 தாமதித்த விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தின் விடைகளை எழுதி கத்தரித்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முகவரி : ஆசிரியர், ஐக்கியச்சுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163, தமிழ்நாடு.

அனைவரும் சமம் என்றால் தான் சமூகம் சீராகும்

## சென்ற மாத ஐக்கியசுடர் வினாவிடை

1. அனைத்துலக தண்ணீர் தினம்
2. கிறிஸ்துமஸ்
3. வெற்றியின் விலை
4. நேர நிர்வாகம் மற்றும் வள நிர்வாகம்
5. மிட்ஸ் புகையில்லா அடுப்பு திட்டம்
6. 5 கோடி
7. சமத்துவ மானுடம்
8. வார்த்தை தூய்மை
9. டிவைன் மெர்சி கல்விக்கடன்
10. கைம்பெண்களின் நல்வாழ்விற்கு குரல் கொடுப்பது
11. 70
12. கீரை
13. 200
14. 218
15. மேம்பாட்டு செயல்பாடுகளுக்கான
16. உணவே
17. 439
18. மாற்றத்திற்கான தலைவர்கள்
19. ரூ 20,00,000
20. ஆஸ்தி
21. பாலின சமத்துவ செயல்பாடுகளை துரிதப்படுத்துவோம்
22. உசேன் போல்ட்
23. சேமிப்பு போக மீதியை செலவு செய்
24. ரூ.1300000
25. Dr. ஜீனா ஜோஸ்பின்

## குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குகொண்டவர்கள்:

- திருமதி. மேகலா, வலியவிளாகம் குழு, ஆதிச்சவிளாகம் கிளஸ்டர், களியக்காவிளை
- செல்வி. S.J. ஜெஸ்லின் ஸ்டெபி, செருப்பாலூர், தளிர்கள் உலகம் திட்டப் பயனாளி
- செல்வன். ஆகாஷ், சூரியகோடு, தளிர்கள் உலகம் திட்டப் பயனாளி
- செல்வி. விஜித்திரா, கோயிக்கத்தோப்பு, தளிர்கள் உலகம் திட்டப் பயனாளி
- திருமதி. நிர்மலா, தாழான்விளை குழு, நடைக்காவு கிளஸ்டர், களியக்காவிளை
- திருமதி. ஜெசிமோள், ஆழங்கால்விளை, கிராத்தூர் கிளஸ்டர், களியக்காவிளை
- திருமதி. மெல்பா, குருத்தோலைக்கட்டி குழு, கிராத்தூர் கிளஸ்டர், களியக்காவிளை
- திருமதி. ஷைனி, கல்லுப்பொற்றை, கிராத்தூர் கிளஸ்டர், களியக்காவிளை

**குறுக்கெழுத்துப்போட்டியில் வெற்றிபெற்றவர் :**
திருமதி. நிர்மலா, தாழான்விளை குழு, நடைக்காவு கிளஸ்டர், களியக்காவிளை


## வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால், அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### விளம்பரம்

**இதழின் கடைசிப் பக்கம்**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2500
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2000

**இதழின் கடைசி பக்கத்தின் உட்பக்கம்**
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.750
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துகள்**
கால்பக்க கட்டணம் Rs.250
அரைப்பக்கத்திற்கு கட்டணம் Rs.500
முழுப்பக்கத்திற்கு கட்டணம் Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும், தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம் - கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email: mids.marthandam@gmail.com Website:mids.org.in
Ph : 263390, 295690


மக்களின் உரிமை காக்கப்படுவது தான் நல்லாட்சி - அறிஞர் அண்ணா

## படித்ததில் பிடித்தது

1. வாகனம் ஓட்டும் போது டயர்கள் தேய்ந்து போகின்றன. ஆனால் நம் உள்ளங்கால்கள் வாழ்நாள் முழுவதும் நடந்த பிறகும் புதியதாகவே இருக்கும்.
2. உடல் 75% தண்ணீரால் ஆனது. ஆனால் மில்லியன் கணக்கான துளைகள் இருந்த போதிலும் ஒரு துளி கூட வெளியேறாது.
3. ஆதரவு இல்லாமல் எதுவும் நிற்க முடியாது. ஆனால் உடல் அதன் சமநிலையை தானே பராமரிக்கிறது.
4. சார்ஜ் செய்யாமல் எந்த பேட்டரியும் இயங்க முடியாது. ஆனால் இதயம் பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து துடிக்கிறது.
5. எந்த பம்பையும் என்றென்றும் இயக்க முடியாது. ஆனால் இரத்தம் உடல் முழுவதும் நிற்காமல் பாய்கிறது.
6. உலகின் மிக விலையுயர்ந்த கேமராக்களுக்கு கூட வரம்புகள் உள்ளன. ஆனால் கண்கள் மில்லியன் கணக்கான பிக்சல்கள் தெளிவுடன் ஒவ்வொரு காட்சியையும் படம் பிடிக்கின்றன.
7. எந்த ஆய்வகமும் ஒவ்வொரு சுவையையும் சோதிக்க முடியாது. ஆனால் எந்த உபகரணமும் இல்லாமல் நாக்கால் ஆயிரக்கணக்கான சுவைகளை அடையாளம் காண முடியும்.
8. மிகவும் மேம்பட்ட சென்சார்களுக்கு கூட வரம்புகள் உள்ளன. ஆனால் தோலால் சிறிதளவு தொடுதலை கூட உணர முடிகிறது.
9. எந்த கருவியும் எல்லா ஒலியையும் உருவாக்குவதில்லை. ஆனால் தொண்டை ஆயிரக்கணக்கான டோன்களையும் அதிர்வெண்களையும் உருவாக்க முடியும்.
10. எந்த சாதனத்தாலும் ஒலிகளை முழுமையாக பகுக்கமுடியாது. ஆனால் காதுகளால் ஒவ்வொன்றையும் புரிந்து கொண்டு விளக்க முடியும்.

பிரபஞ்சத்தால் நமக்கு கொடுக்கப்பட்ட விலைமதிப்பற்ற பரிசுகளுக்கு நன்றியுடன் இருப்போம்.

**திருமதி. விஜயா**
செயலூக்குநர்

# வாழ்த்துகிறோம்

மிட்ஸ் நிறுவனத்தில் நிறைவாழ்வு சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராகவும், மிட்ஸ் ஐக்கியச் சுடர் இதழின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்ட

செல்வன். **S. ஷாபின்,** BD., MSW, M.Phil அவர்களின்

பணிச் சிறக்க வாழ்த்துகளும், பாராட்டுக்களும் மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழ் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறோம் ! ! !



ஏழ்மை ஒழிப்பு சமூக நீதியின் முதல் படி - லூயிஸ் இன்னாசியோ லூலா டா சில்வா



# பணி ஒய்வு தின நல்வாழ்த்துகள் 29

## திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றணி, MSW., LL.B.

**மிட்ஸ் நிறைவாழ்வு சங்க ஒருங்கிணைப்பாளர்**

**17-08-1997 - 16-03-2026**



பாசமிகு **திரு. ஜோசப் பேட்ரிக் ஆன்றணி** MSW, LL.B. அவர்கள் சுமார் 29 வருடங்களாக மிட்ஸ் நிறுவனத்தில் சேவைபுரிந்து, பணிஓய்வு பெறுவதில் பெருமகிழ்வு அடைகிறது மிட்ஸ் குடும்பம்.

இந்நிறுவனத்தில் நடைபெறும் ஒவ்வொரு திட்டங்களையும் ஒருங்கமைத்து செயல்வடிவம் கொடுக்க உறுதுணை புரிந்தவர்.

ஒடுக்கப்பட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் தேவைகளை திட்டமிட்டபடி செயல்படுத்துவது மற்றும் மிட்ஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலோடு குழுக்களை வங்கிகளோடு இணைத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தவர்.



திருவாளர் அவர்கள் நமது மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழின் ஆசிரியராக தொடக்க காலத்திலிருந்து செயலாற்றியவர்.

நேர் கொண்ட பார்வையோடும், நடுநிலைத்தன்மையோடும், எப்போதும் சுறுசுறுப்போடும், துடிப்போடும் துணிந்து செயல்படுபவர்.

அவர்களது பணி ஒய்வானது இறையாசீர் நிறைந்ததாகவும்,
நீடித்த உடல்நலத்தோடு பல்லாண்டு வாழ்ந்து
அவனியில் சிறந்த சமூக சேவகராய் திகழ இறைவனை வேண்டி,
பணிஓய்வு தின நல்வாழ்த்துகளை
மிட்ஸ் குடும்பம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.






Mob. 89039 36006
94891 71659
REHOBOTH
Nursery Garden
License No.: 296/TNV/16
Villukury Main Road, Kanyakumari District
Tamil Nadu.
e-mail : rehobothnur16@gmail.com
Sales of All kinds of Agriculture,
Horticulture Plants & Inputs